Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 17 வியாழக்கிழமை (03-10-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 229

# தமிழகத்துக்கு செல்ல 10 ஆயிரம் பேர் மன்னார்க் கரையோரம் காத்திருப்பு!

## படகுகள் இன்றி அவதியாம்

லண்டன், ஒக்ரோபர் 03

கிளிநொச்சி இராணுவ நடவடிக்கையை அடுத்து அகதிகளாக இடம்பெயர்ந்த சுமார் இரண்டு லட்சம் மக்களில் பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் தமிழகத்துக்குச் செல்வதற்காக மன்னார் மாவட்ட கரையோரப்பகுதிகளான விடத்தல் தீவு, வங்காலை போன்ற இடங்களில் காத்திருக்கின்றனர்.

தமிழகத்துக்குச் செல்வதற்கு போதிய படகு வசதியின்றி அவர்கள் அல்லற்படுகின்றனர்.

அப்பகுதியிலிருந்து நேற்று முன்தினம் அகதிகளாகச் சென்றவர்கள் இத்தகவலை இராமேஸ்வரத்தில் வெளியிட்டதாக அங்கிருந்து பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

''பாதிக்கப்பட்ட மக்கள் வங்காலையிலும் விடத்தல் தீவிலும் காத்துநிற்கின்றனர். ஆனால் படகு வசதிதான் இல்லை.

''அகதிகளை ஏற்றி வரும் படகுகளை இந்தியக் கடற்படையினர் துரத்திப்பிடித்து பறிமுதல் செய்து வருவதால் அகதிகளைத் தமிழகத்துக்கு ஏற்றிச் செல்ல இலங்கை மீனவர்கள் அஞ்சுகின்றார்கள்.

''அப்படி ஏற்றிவர முன்வந்தாலும் பத்தாயிரம் ரூபா வரை கட்டணம் செலுத்த வேண்டியிருக்கின்றது

''போதிய படகு வசதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 346 அகதிகள் செவ்வாய் இராமேஸ்வரம் சென்றனர்

இராமேஸ்வரம், ஒக். 3

பெரும்பாலும் கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த— 346 அகதிகளைக் கொண்ட — இலங்கைத் தமிழர் குழு ஒன்று நேற்று முன்தினம் மாலை ஐந்து படகுகளில் இராமேஸ்வரத்தை வந்தடைந்திருக்கின்றது.

இவர்களை ஏற்றி வந்த இலங்கை மீனவர்களின் ஐந்து படகுகளும் அகதிகளை இராமேஸ்வரத்தில் இறக்கி விட்டு இலங்கைக்கு மீண்டும் தப்பிச் செல்ல முயற்சிக்கையில் இந்திய கடற்படைக் கப்பல்கள் அவற்றைத் துரத்திச் சென்றதாகவும்—

அவற்றில் நான்கை விரட்டிப் பிடித்த கடற்படையினர் அவற்றைப் பறிமுதல் செய்திருப்பதாகவும் செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டன.

இலங்கையிலிருந்து அகதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற் போனோரின் பெற்றோர் அதிகார சபை தலைவரிடம் முறைப்பாடு

### தகவல் அறிந்து தெரிவிக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம் ஒக். 3

யாழ்ப்பாணக்குடாநாட்டில் மிக அண்மைக் காலத்தில் காணாமற்போன 65 இளைஞர், யுவதிகளின் பெற்றோர்கள் —

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த வடமாகாண மீள் குடியேற்ற அதிகார சபையின் தலைவர் சோமபால குணதீரவைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பு யாழ். செயலகத்தில் நடைபெற்றது. தமது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது, எங்கிருக்கிறார்கள் என்ற தகவல்களைப் பெற்றுத் தருமாறு பெற்றோர்கள் அவரிடம் கோரினார்கள்.

இது விடயத்தைத் தாம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவருவதாகக் கூறிய திரு. சோமபால குணதீர —

ஒவ்வொரு பெற்றோரையும் அவர்களின் பிள்ளைகள் பற்றிய விவரங்களைத் தனித்தனியே தருமாறு கேட்டுக் கொண்டார்.

அதன் பிரகாரம் 65 பெற்றோர்களும் தமது பிள்ளைகள் குறித்த விவரங்களைத் தயாரித்து வ. மீ. அ. சபையின் தலைவரிடம் கையளித்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியைப் பிடிப்பது சிரமமான காரியமல்ல!

### இராணுவத் தளபதி கூறுகின்றார்

கொழும்பு, ஒக். 3

யாழ் குடாநாட்டையும் கிளிநொச்சியையும் விடுதலைப் புலிகளிடமிருந்து அரசுத் துருப்புக்களால் கைப்பற்ற முடியுமானால் வன்னிப் பகுதியை ஏ கைப்பற்ற முடியாது? வன்னிப்பகுதியைத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது அரசுத் துருப்புகளுக்கு சிரமமான காரியமல்ல.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்த இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

கொழும்புப் பத்திரிகைச் செய்திகளை மேற்கோள் காட்டி 'வெரித்தாஸ்' வானொலி இத்தகவலை வெளியிட்டது

கைப்பற்றியுள்ள கிளிநொச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கையின் போது

## கைதான யாழ். இளைஞர் 32 பேர் இன்று கப்பல் மூலம் இங்கு வருவர்

### 500 அகதிகளும் கூட வருவர்

யாழ்ப்பாணம், ஒக். 3

''சூரியப் பிரகாசம் - 2'' இராணுவ நடவடிக்கையின் போது படையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு —

வீரவில புனர்வாழ்வு முகாமில் வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 32 இளைஞர்களும் —

இன்று வியாழக்கிழமை கப்பல் மூலம் காங்கேசன் துறை வந்து சேருவர் — என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி தென்மராட்சி நோக்கி ஆரம்பிக்கப்பட்ட ''சூரியப் பிரகாசம் - 2'' இராணுவ நடவடிக்கையின் போது இவர்கள் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

எனினும் இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான போதிய ஆதாரங்கள் இல்லாததால் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டிருந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ். கப்பல் மூலம் மீண்டும் தபால்கள் அனுப்பும் பணி

யாழ்ப்பாணம், ஒக். 3

குடாநாட்டில் இருந்து வெளியூர்களுக்கான 23 தபால் பொதிகள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் தபால் எடுத்துச் செல்லும் பணி கடந்த பல மாதங்களாக நிறுத்தப்பட்டிருந்தது என்றும்—

மீண்டும் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும்—

பிரதம தபாலதிபர் திரு. க. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களும் செவ்வாய்க்கிழமைவரை தபாலிடப்பட்ட தபால்களும் நேற்று அனுப்பப்பட்டன என்றும் அவர் சொன்னார்.

அதேவேளை—

வெளியூர்களுக்கான துரித தபால் சேவை தொடர்ந்து நடைபெறுவதாகவும் அவர் கூறினார். (உ-3)

## மூலிகை மூலம் பெற்றோல்: கண்டு பிடிப்பு ஒரு 'ஹம்பக்'?

லண்டன், ஒக். 3

மூலிகையில் இருந்து பெற்றோல் தயாரிக்கும் — தமிழக விவசாயியான — ராமர் பிள்ளையின் கண்டுபிடிப்பு குறித்து இந்திய விஞ்ஞானிகள் தமது சந்தேகத்தை வெளியிட்டிருக்கின்றார்கள்.

சென்னையில் உள்ள இந்திய தொழில் நுட்பக் கழகத்தில் நடந்த செயலமர்வு ஒன்றில் தமது கண்டுபிடிப்பை ராமர்பிள்ளையால் செய்து காட்டமுடியாமல் போய் விட்டதை அடுத்தே அந்த கண்டுபிடிப்பின் உண்மைத் தன்மை குறித்து சந்தேகம் கிளம்பியிருக்கின்றது.

அங்கு மூலிகையைக் காய்ச்சி அதனை ராமர்பிள்ளை வடித்த போது ஒரு துளி பெற்றோல் கூடக் கிடைக்கவில்லை.

வழக்கமாக இதனைச் செய்து காட்டுவதற்கு தாம் தம்முடன் எடுத்து வரும் பாத்திரங்களையே ராமர் பிள்ளை பயன்படுத்துவார். ஆனால் சென்னையில் விஞ்ஞானிகள் அதனை அனுமதிக்கவில்லை.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## டென்மார்க்கில் ஈழத் தமிழர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போர்!

ஈழத் தமிழ் அகதிகளை இவரை டென்மார்க் அரசு சிறிலங்காவுக்கு அரசியல் தஞ்சம் வழங்காமல் திருப்பி அனுப்ப முடிவெடுத்துள்ளதைக் கண்டித்தும் —

அந்நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள நூற்றுக்கணக்கானோருக்கு அரசியல் தஞ்சம் வழங்குமாறு கோரியும் —

ஈழத் தமிழ் அகதிகள் டென்மார்க்கில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர் என ''வெரித்தாஸ்'' வானொலி தகவல் வெளியிட்டது. (உ-10)

# வடக்கை மீண்டும் கட்டி எழுப்பும் நடவடிக்கைக்கு ஐ. நா. உதவும்

யுத்தத்தால் சீரழிந்துள்ள வடபகுதியை மீண்டும் கட்டி எழுப்பும் நடவடிக்கைகளுக்கு ஐ.நா. சபை உதவிவழங்கும் என ஐ. நா. பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி வாக்குறுதி அளித்துள்ளதாக ஸ்ரீ லங்கா வெளிவிவகார அமைச்சுத் தகவல்களை ஆதாரங்காட்டி றோய்ட்டர் செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ. நா. சபைக் கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஐ. நா. பொதுச் செயலாளரைச் சந்தித்த போதே இந்த வாக்குறுதி அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் முடிவுக்கு வந்தவுடன் வடக்கில் பெரிய அளவில் புனர் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது எனவும் —

இதற்கான நிதியை வழங்குவது தொடர்பாக ஐ. நா. சாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும்— தெரிவிக்கப்படுகிறது.

## 3 பொலீஸார் மட்டக்களப்பில் காயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பேத்தாளை என்னும் இடத்தில் பொலீஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று பொலீஸார் காயமடைந்தனர்.


**INSTITUTE OF INFORMATICS STUDIES**
JAFFNA — SRI LANKA

புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன.

**Diploma Courses**
- ★ Dip. in Software Technology,
- ★ Dip. in Electrical Tecnician.

மேலதிக விவரங்சளுக்கு:
68, Clock - Tower Road, Jaffna.
(பெருமாள் கோயிலுக்கு அருகில்)

(42983)


## 21 ஆவது நினைவஞ்சலி

மலர்வு: 05—08—1917

உதிர்வு: 03—10—1975

திருமதி
**மேரி கிருபையம்மா இராஜக்கோன்**

அன்போடும் பாசத்தோடும் எங்களை
வளர்த்து ஆளாக்கிய எமது
அன்னைக்கு எங்கள் இதயபூர்வ
அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்புப்பிள்ளைகள்.

28, றக்கா லேன்,
யாழ்ப்பாணம்.

(42987)

## கண்ணீர் அஞ்சலி

எமது சமாச உறுப்பினர்
திரு. மா. சம்புலிங்கத்தின் தாயார்
**திருமதி மாணிக்கம் பார்வதி**
(சங்கிலியன் வீதி, நல்லூர்)

அவர்கள் 01-10-96 இல் சிவபதமடைந்ததையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதுடன், பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகிகள்
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்

(42986)

## இதய அஞ்சலி

**திருமதி புவனேஸ்வரி கமலநாதன்**

எமது கல்லூரி முதல்வர்
திரு. ஆ. கமலநாதன் அவர்களின் பிரிய பத்தினி திருமதி புவனேஸ்வரி கமலநாதன் அவர்களின் பிரிவு குறித்து இதயத்தால் அஞ்சலி செலுத்துகிறோம்.

ஆசிரிய கழகம்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
கந்தரோடை, சுன்னாகம்.

(42998)

## கண்ணீர் அஞ்சலி

யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர்
திரு கமலநாதன்
அவர்களின் துணைவியார்
**திருமதி புவனேஸ்வரி கமலநாதன்**
மறைவையொட்டி எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நடேஸ்வராக் கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(41989)


**SPOKEN ENGLISH**
by
BRITTO
ஆரம்பம்:- 05-10-96
நேரம் :- 4-30 மணி
PERSONAL CLASS
ஜோன் பொஸ்கோ
முன்பாக
(றக்கா வீதி)

(42990)

**SPOKEN ENGLISH**
**by BRITTO**
ஆரம்பம்: 05-10-1996
நேரம்: 11 மணி
புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(42930)

புதிய பிரிவு
**SPOKEN ENGLISH**
**by: BRITTO**
செவ், வியா. 3-30 மணி
நடைபெறுகிறது.
**சிவாகி**
**கல்வி நிலையம்**
சாவகச்சேரி.

(42978)

**D· M· I·**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
**A/L 96**
**DAY CLASS**
ஆரம்பம்: 4—10—96
காலை 8-00 மணி

கணக்கியல்
திரு. வன்னியசிங்கம்
வர்த்தகம்
திரு. பசில்
பொருளியல்
திரு. இராஜேஸ்வரன்
அளவையியல்
திரு. R. P. சர்மா
தமிழ்
திரு. பாலா
இந்துசமயம்
இந்துநாகரிகம்
திரு சிவானந்தன்
நாடக அரங்கியல்
திரு. சந்திரன்
கிறிஸ்தவம்
திருமதி மல்லிகா
புவியியல்
திரு. இக்னேசியஸ்

(42981)


## மெதடிஸ்த திருச்சபை-கட்டைவேலி

## 175 ஆவது

## வருட நிறைவு விழா

## நிகழ்ச்சிகள்

4-10-96 வெள்ளி காலை வழிபாடு ஆலயக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 8-10-96 செவ்வாய் வரை நடைபெறும்.

7-10-96 திங்கள் பி. ப 3 மணிக்கு இடைக்குறிச்சி சிற்றாலய 25 ஆவது வருட நிறைவு வெற்றி விழா.

8-10-96 செவ்வாய் பிற்பகல் 2. 30 மணிக்கு மந்திகை ஆதார வைத்தியசாலை மெதடிஸ்த சிற்றாலய முதலாம் வருட நிறைவு விழா.

விழா நிகழ்வுகளில் அனைவரும் இணைந்து ஆசி பெறுக.

அருட்திரு பி. ஜே. மேதர்,
சேகரகண்காணிப்புக்குழு.

(சி- 3221)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா இராசையா

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இணுவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான சுப்பையா இராசையா அவர்கள் 26-09-96 இல் இலண்டனில் காலமானார்.

இவர் இணுவில் கிழக்கு செல்வநாயகியின் அன்புக் கணவரும், சரஸ்வதி (லண்டன்), மகேந்திரராசா (இந்தோனேசியா), சிறீஸ்கந்தராசா (லண்டன்), ஈஸ்வரிதேவி (கனடா), குகேந்திரராசா (லண்டன்) லலிதா (லண்டன்), கதிர்காமராசா (லண்டன்), ஜெனா (லண்டன்), கௌசலை (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று(2-10-96) புதன்கிழமை மாலை 3 மணிக்கு லண்டனில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. இராமநாதபிள்ளை (சின்னராசா)
(மைத்துனர்)

''தேவிவாசம்''
தியேட்டர் வீதி,
இணுவில்.

(42980)

### சைவப்புலவர் ஆ இரத்தினசபாபதி

B. A. (Dip - in. Edu)
(முன்னாள் அதிபர் யா / தேவரையாளி இந்துக் கல்லூரி)

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிரியை வசிப்பிடமாகவும் கொண்டசைவப்புலவர் ஆ. இரத்தின சபாபதி 02 - 10 - 96 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வார்ப்பிள்ளை - பவளம் தம்பதிகளின் மூத்த புதல்வனும், திலகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சைவப்புலவர் வல்லிபுரம் (ஆசிரியர்)- மீனாட்சியம்மா தம்பதிகளின் மருமகனும். திருமதி அனுசூயா, உமாசங்கர் (நிர்க்கிளை, யாழ். பல்கலைக் கழகம்), சிவசங்கர் (ஆசிரியர்), உதயசங்கர் (ஆசிரியர், நாகர்கோயில் மகா வித்தியாலயம்), பிரபோசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும், க. ரஞ்சன் (வட - கிழக்கு மாகாண சபை, திருகோணமலை) அவர்களின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வதிரி ஆலங்கட்டை மயானத்தில் (03-10-96) இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. உமாசங்கர்
(மகன்)

''வதிரி''
நெல்லியடி.

(42984)

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சுப்பிரமணியம் 2- 10- 96 புதன்கிழமையன்று காலமானார்.

இவர் சின்னத்தம்பி – தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், தேவிகாராணியின் அன்புக் கணவரும், சுபேந்திரன், சுமித்திரா, சுரேந்திரன், சுமித்திரன் ஆகியோரின் அன்புத்தகப்பனாரும், கந்தையா, கனகம்மா, இராசம்மா. அன்னலட்சுமி, காசிநாதன், கனகேஸ்வரி, ரேவதி, கருணாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3-10-96) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சண்டிலிப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
இ. பஞ்சேந்திரன்

மணிபவனம்,
மாசியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(42988)

# தன்னைச் சுற்றி சி.பி.ஐ. விரிக்கும் சட்ட வலையில் சிக்குவாரா ராவ்?

## உபகண்ட வரலாற்றில் புதிய ஊழல் சர்ச்சைகள்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் நரசிம்மராவுக்கு இதுபோதாத காலம் என்றுதான் கூறவேண்டும்.

தமது நீண்டகால அரசியல் வாழ்வைப் பழுதின்றி முடித்துக் கொண்டு முதுமை, உடற் சுகவீனம் என்பவை காரணமாக — ஆந்திராவில் உள்ள தனது வீட்டிற்கு — 'அக்காடா' என்று ஓய்வெடுக்கச் சென்ற அவரை ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவம் மீண்டும் பிரபலத்துக்கு — அரசியல் வாழ்வில் மறுபிறப்புக்கு — கூட்டி வந்தது.

அந்த வாழ்வில்தான் இப்போது அவலத்துக்குள் சிக்கி — அல்லற்பட்டு — சந்தி சிரிக்கும் நிலையில் நிற்கின்றார் முதியவர் நரசிம்மராவ்.

1991 இல் ராஜீவ் காந்தி கொலையுண்ட போது, தங்களுக்குள் புதிய தலைவர் ஒருவரைச் சுமுகமாக — இழுபறியின்றி — தெரிவு செய்ய முடியாத இந்திரா காங்கிரஸ் கட்சியினர், வயதில் முதிர்ந்த கட்சிப் பிரமுகரும், சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்டவர் என்று அப்போது கருதப்பட்டவருமான நரசிம்மராவை ஓய்வுக் கதிரையிலிருந்து பிரதமர் கதிரைக்கு இழுத்து வந்தார்கள்; கட்சித் தலைவர் கிரீடத்தையும் சூட்டினார்கள்.

ஆனால் அவர் இப்போது சர்ச்சைகளில் சிக்கி, தனது சொந்த வீட்டில் தானும் ஓய்வெடுக்க முடியாது ''மாமியார் வீட்டுக்கு'' அனுப்பப்படும் நிலையில் இருக்கின்றார்.

ராவைச் சூழ்ந்து வரும் ஆபத்துக்கள் அவரது கழுத்தை கிடுக்கிப் பிடி கொண்டு நசுக்கப் போகின்றன என்பதுதான் அவதானிகளின் ஊகம்.

தாம் இழைத்த தவறுகளுக்காக— அல்லது தாம் இழைத்ததாகத் தம்மீது குற்றம் சுமத்தப்படும் தவறுகளுக்காக — பதில் சொல்ல வேண்டிய இக்கட்டு நிலையில் இருக்கும் ராவுக்கு இப்போது உதவக் கூடியவர்கள் அவரது சட்டத்தரணிகள் மட்டுமே; அவரது கட்சியோ அல்லது கட்சிப் பிரமுகர்களோ, தொண்டர்களோ, ஆதரவாளர்களோ அல்லர்.

தான் பிரதமராக இருந்த போது தனது அமைச்சரவையிலிருந்த ஏனைய சகாக்கள் புரிந்ததாகக் கூறப்படும் ஊழல் லீலைகள் அம்பலம் ஏறிக்கொண்டிருப்பதால் ராவ் பற்றிய பொது அபிப்பிராயம் கறைபட்டுக் கொண்டிருப்பது ஒருபுறம் இருக்க —

ராவ் புரிந்த தவறுகள் இப்போது அவரது தலைக்கு மேல் கத்தியாக வந்து நிற்பதுதான் அவருக்கு பெரும் தலையிடியைத் தருவனவாக உள்ளன.

ராவ் உடனடியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பல. அவற்றில் முக்கியமான சிலவற்றைப் பார்க்கலாம்.

அவற்றுக்கு முன் ராவின் முக்கிய நண்பர் அல்லது வழிகாட்டி அல்லது சகா என்று கூறப்படும் சந்திர சுவாமி பற்றி ஓர் அறிமுகம்.

உலகின் மிகப்பெரும் பணக்காரர் என்று கருதப்படும் புறூணை நாட்டு மன்னர் முதல் பல ஹொலிவூட் நடிகர்கள், நடிகைகள் வரை தமது நண்பர்கள் என்று பிரபலாபித்துக் கொள்பவர் இந்த சர்ச்சைக்குரிய சந்திர சுவாமி. பல சர்வதேச ஆயுத வர்த்தகர்கள் முதல் பெரும் கோடீஸ்வரர்கள் வரை பலருடன் அவருக்குத் தொடர்புண்டு. நாடுகளின் தலைவர்களுடன் சிநேகம் வைத்துக்கொண்டு, வர்த்தகர்களுக்கு மற்றைய நாடுகளின் வர்த்தக ஒப்பந்தங்களைப் பிடித்துக் கொடுத்து — ''கமிஷன்'' ஏஜெண்டாகச் செயற்பட்டு — பல தலைவர்கள், வர்த்தகர்களை தமது கைக்குள் போட்டுக் கொள்பவர்தான் இந்தச் சுவாமியார்.

அவரைத் தமது ஆத்மார்த்த குருவாக்கிக் கொண்டதன் புண்ணியத்தை வாங்கிக் கட்டிக்கொள்ளப்போகின்றார் ராவ்.

### லகுபாய் பதக் மோசடி வழக்கு

வெளிநாட்டில் வதியும் இந்தியரான லகுபாய் பதக் பல்வேறு நாடுகளில் இருந்தும் இந்தியாவுக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தவர்.

இந்தியாவில் நியூஸ்பிரிண்ட் காகிதத்தை இறக்குமதி செய்வதற்கான பெரிய ''ஓடர்'' ஒன்றைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து அவரிடம் இருந்து ஒரு லட்சம் அமெரிக்க டொலரைப் பெற்று மோசடி செய்ததாக சந்திர சுவாமி மீதும், அவரது உதவியாளர் கைலாஷ் நாத் அகர்வால் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இருவரும் விளக்கமறியலில் உள்ளனர்.

இந்த இருவருடனும் சேர்ந்து நரசிம்மராவும் இம்மோசடியில் ஈடுபட்டதாக லகுபாய் பதக் தமது வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதை அடுத்து இந்த வழக்கில் மூன்றாவது நபராகக் குற்றம் சுமத்தப்படுவதற்காகவே தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நரசிம்மராவ் அழைக்கப்பட்டிருக்கின்றார். அவர் நீதி மன்றத்தில் ஆஜராகும்போது அவரிடம் குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மோசடிச் சம்பவம் 1983 இல் நடந்ததாகக் கூறப்படுகின்றது. அப்போது நரசிம்மராவ் வெளிவிவகார அமைச்சர்.


லகுபாய் பதக்கின் வாக்குமூலப் படி —

இறக்குமதி ஓடருக்கான லஞ்சத் தொகையாக ஒரு லட்சம் அமெரிக்க டொலரைப்பெற்றுக்கொண்ட சந்திர சுவாமி, தமது நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அமெரிக்காவில் வைத்து 1983 கிறிஸ்மஸுக்குச் சில தினங்களுக்கு முன்னர் அமைச்சர் நரசிம்மராவை லகுபாய் பதக்கிற்கு நேரில் அறிமுகப்படுத்தினார். அப்போது 'லகுபாய் பதக் பற்றி சந்திர சுவாமி எல்லாம் விளக்கமாகக் கூறியிருக்கின்றார். அந்த வேலை முடித்துத்தரப்படும்.'

— என நரசிம்மராவ் பதக்கிடம் உறுதியளித்தாராம். அதனைத் தொடர்ந்து நியூயோர்க்கில் உள்ள ஹொலோரன் ஹோட்டலில் நரசிம்மராவுக்கும், சந்திர சுவாமிக்கும் ஏனையோருக்கும் பெரும் செலவில் பதக் ஒரு மதிய போசன விருந்தளித்தாராம்.

— இவ்வாறு பதக் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

தவிரவும், இது விடயமாக பின்னர் தாம் பல கடிதங்களை நரசிம்மராவுக்கு அனுப்பியதை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்



றார் பதக். அக்கடிதங்கள் நரசிம்மராவைச் சென்றடைந்த போதிலும் அவற்றுக்கு ராவ் பதிலளிக்கவில்லை.

இந்த வழக்கில் நேரடியாக ஆஜராகுமாறு தமக்கு புதுடில்லி சிரேஷ்ட மாஜிஸ்திரேட் நீதிமன்ற[illegible] அழைப்பாணை அனுப்பியது தவறு என்று புதுடில்லி மேல் நீதிமன்றத்திலும் பின்னர் உயர்நீதிமன்றத்திலும் மேன்முறையீடுகளைச் செய்த நரசிம்மராவ், அந்த நீதிமன்றங்களில் சமர்ப்பித்த மனுக்களில் லகுபாய் பதக் நம்பிக்கைக்கு உரியவர் அல்லர் என்று தெரிவித்திருந்தார்.

லகுபாய் பதக் தமது வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருக்கும் காலத்தில் தான் நியூயோர்க் பக்கமே தலைவைக்கவில்லை என்று நரசிம்மராவ் தெரிவித்திருந்தார்.

ஆனால் இக்கால கட்டத்தில் நரசிம்மராவ் நியூயோர்க்கில் இருந்தார் என்பதை பத்திரிகைகள் மோப்பம் பிடித்து, அறிந்து தற்போது அம்பலப்படுத்தியிருக்கின்றன.

இந்த வழக்கில் ராவ் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படும் போது, கன்னாபின்னாவென்று குறுக்கு விசாரணை செய்யப்படலாம் என்றும் —

**தொகுப்பு: கவி**

அவரது பொது வாழ்வுக்கு களங்கம் ஏற்படுத்தக் கூடிய கேள்விகளுக்கு அவர் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்றும் கருதப்படுகின்றது.

### செயிண்ட் கீட்ஸ் போலி ஆவண வழக்கு

வி. பி. சிங் பிரதமராக இருந்தபோது அவருக்கும் அவரது மகனுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்காக கரீபியன் தீவுகளில் ஒன்றில்— செயிண்ட் கீட்ஸ் வங்கியில் — பல கோடி டொலர் வைப்புத் தொகையை வி. பி. சிங்கின் மகன் வைத்திருந்தார் என்று கூறும் போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்டன என்பதே இந்த வழக்கில் முக்கிய குற்றச்சாட்டாகும்.

இந்த வழக்கிலும் சந்திர சுவாமியே முக்கிய சந்தேக நபர். அவருடன் சேர்த்து நரசிம்மராவ் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மிக விரைவில் இந்த வழக்கு நீதிமன்றத்துக்கு வரும்போது நரசிம்மராவ் மீண்டும் தலைகுனிவை சந்திப்பார் என எதிர்பார்க்கலாம்.

### ஜெயின் ஹவாலா மோசடி வழக்கு

ஹவாலா மோசடி வழக்கு இவ்வருட முற்பகுதியில் இந்தியத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் இந்தியாவை ஒரு கலக்குக் கலக்கியது தெரிந்ததே.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வானி முதல் காங்கிரஸ் அமைச்சர்கள், மூத்த தலைவர்கள் வரை பலர் ஹவாலா மோசடி வழக்கில் நீதிமன்றத்தின் முன்னால் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

அவ்வாறு குற்றச்சாட்டுக்கு உள்ளான காங்கிரஸ் தலைவர்கள் எவருக்கும் கடந்த பொதுத் தேர்தலில் கட்சி வேட்பாளராகப் போட்டியிட ராவ் அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இப்போது —

1995 மே இறுதியில் அமைச்சர் சதீஷ் சர்மா மூலமாக மூன்றரைக் கோடி ரூபாவை எஸ். கே. ஜெயினிடமிருந்து நரசிம்மராவுக்கு சந்திர சுவாமி பெற்றுக் கொடுத்ததாகக் குற்றச் சாட்டு கிளம்பியிருக்கின்றது.

ஊழல், மோசடி வழக்கில் நரசிம்மராவ் சிக்குவதற்குக் காரணமாக இருந்த லகுபாய் பதக்கும், இந்த மோசடிவிவகாரத்தில் தரகராகச் செயலாற்றியதாகக் கூறப்படும் சர்ச்சைக்குரிய சந்திர சுவாமியும்.



சந்திரசுவாமி



லகுபாய் பதக்

இந்த வழக்கில் நரசிம்மராவுக்கு எதிராகக்குற்றம்சுமத்துவதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்று தெரிவித்து இந்திய மத்திய புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) சமர்ப்பித்த அறிக்கையை இந்திய உயர் நீதிமன்றம் ஏற்க மறுத்து விட்டது.

இந்த அறிக்கையைச் சமர்ப்பித்ததற்காக சி. பி. ஐ. யைக் கண்டித்த உச்ச நீதிமன்றம், சி. பி. ஐ. இந்த விடயத்தில் சரியான விசாரணையை நடத்தாவிட்டால் இந்த ஊழல் குற்றச்சாட்டை உரிய முறையில் விசாரிப்பதற்கான ஏற்பாட்டை நீதிமன்றமே செய்து கொள்ளும் என்றும் எச்சரித்து —

நரசிம்மராவின் வழக்குகளில் ''போதிய தீவிரம் காட்டவில்லை' என்று சி பி ஐயின் அப்போதைய இயக்குநரான விஜயராமராவை உயர் நீதிமன்றம் கண்டனம் செய்யவும் தவறவில்லை.

ஆனால் சி. பி. ஐயின் தற்போதைய இயக்குநரான ஜோகிந்தர் சிங் நரசிம்மராவ் விவகாரம் உட்பட அனைத்து அரசியல்வாதிகளின் விடயத்திலும் விடாப்பிடியாக நிற்பதாகத் தெரிகின்றது.

மத்தியில் வலுவான அரசு இல்லாமல், கூட்டணி ஆட்சி ஏற்பட்டிருப்பதும்—

மத்திய அரசில் இருக்கும் பிரபலங்கள் தனித்து அழுத்தம் தரக்கூடிய அரசியல் வலுவற்றவர்களாக இருப்பதும்—

தற்போது சி. பி. ஐ. விசாரணைகளில் அரசியல் அழுத்தங்கள் ஏற்படாமல் இருக்கக் காரணங்கள் என்று கூறப்படுகின்றது. இந்த நிலைமையை சரியாகப்பயன்படுத்தி ஊழல் — பேர்வழிகளை — அரசியல்வாதிகளை — ஒட்டுமொத்தமாக கூண்டில் ஏற்றும் முயற்சியில் சி. பி. ஐ. ஈடுபட்டிருக்கிறது போலும்.

### ஜெ. எம். எம். இலஞ்ச வழக்கு

1991 இல் அரசுக் கட்டில் ஏறிய ராவின் சிறுபான்மை அரசாங்கம் 1993 இல் பெரும் நெருக்கடியை எதிர் கொண்டது. அப்போது பிரதான எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையிலிருந்து தப்பிப் பிழைப்பதற்காக உதிரிக்கட்சிகளின் எம். பிக்களுக்கு நரசிம்மராவ் இலஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கினார் என்பதே குற்றச் சாட்டு.

இந்த வழக்கில் ''ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா'' (ஜே. எம். எம்.) கட்சியின் நான்கு எம். பிக்களையும் விலைக்கு வாங்க மூன்று கோடி ரூபா கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணம் எந்த வங்கி ஊடாகச் செலுத்தப்பட்டது என்பதை பகிரங்கமாக அம்பலப்படுத்தியுள்ள அந்த நான்கு எம். பிக்களில் ஒருவர் நரசிம்மராவுக்கு எதிராக நீதிவான் முன்னிலையில் வாக்குமூலம் கொடுக்கவும் தயாராக இருக்கின்றார்.

வங்கியில் பணம் செலுத்தப்பட்ட விவரங்களை ஆவணங்களுடன் கண்டு பிடித்திருக்கும் விசாரணையாளர்கள் அப்பணம் எங்கிருந்து வந்தது என்பது குறித்து தற்போது துருவி வருகின்றார்கள்.

இந்த வழக்கில் பிரதான குற்றச் சந்தேக நபராக நரசிம்மராவின் பெயர் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விரைவில் நரசிம்மராவுக்கு எதிரான குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படும்

### உர இறக்குமதி ஊழல்

உர இறக்குமதி தொடர்பாக துருக்கி நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்தம் வழங்கிய விடயத்தில் 134 கோடி ரூபா ஊழல் இடம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக பல பிரமுகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கில் நரசிம்மராவ் நேரடியாகத் தொடர்புபடவில்லையாயினும் இந்த ஊழலுடன் அவரது மகன் பிரபாகரராவுக்கு நெருங்கிய சம்பந்தம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தை சட்டத்துக்கு முரணான வகையில் — தரகுப் பணத்தைப் பெற்றுக் கொண்டு — வழங்குவதற்கு இடைத்தரகராக பிரபாகரராவ் இருந்துள்ளார் என்பதே இப்போது தெரிவிக்கப்படும் சந்தேகமாகும். இது தொடர்பாக பிரபாகரராவ் சி. பி. ஐ அதிகாரிகளினால் — பல தடவைகள் பலமணி நேரம் துருவித் துருவி விசாரிக்கப்பட்டிருக்கின்றார்.

### மற்றும் சில குற்றச்சாட்டுக்கள்

மத்தியப் பிரதேசத்தில் வைத்திலாவில் உள்ள இரும்புத்தாது சுரங்கத்தை தனியார் நிறுவனமான தேவ் அண்ட் மிட்டல்ஸுக்கு 17 கோடிரூபாவுக்கும் குறைந்த தொகைக்கு கைமாற்றியது —

(5ஆம் பக்கம் பார்க்க)

# நரசிம்மராவை பாதுகாக்க தேவகௌடா அரசு முயற்சி

## எதிர்க்கட்சிகள் கண்டனம்

புதுடில்லி, ஒக். 3

ஊழல் குற்றச்சாட்டில் சிக்கி உள்ள முன்னாள் பிரதமர் நரசிம்மராவை பாதுகாக்க தேவகௌடா தலைமையிலான ஆளும் ஐக்கிய முன்னணி அரசு முயற்சிக்கிறது என] எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

நரசிம்மராவ் தொடர்பான ஊழல் வழக்கில் மத்திய புலனாய்வுத் துறை சார்பில் நீதிமன்றத்தில் வாதாடும் வழக்கறிஞர் கோபால் சுப்பிரமணியம் ஆவார்.

இவருக்கு மத்திய புலனாய்வுத்துறை அனுப்பிய அவசர குறிப்பில் நீதிமன்றத்தில் நரசிம்மராவ் முன்பிணை அனுமதி கோரினால் அதை எதிர்க்க வேண்டாம் என்று அறிவுறுத்தியதாகத் தெரியவந்துள்ளது.

இதனை எதிர்த்து புலனாய்வுத்துறை சார்பாக அமர்த்தப்பட்டுள்ள வழக்கறிஞர் கோபால் சுப்பிரமணியம் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

மத்திய அரசின் அழுத்தம் காரணமாகத்தான் புலனாய்வுத்துறை அந்த பணிப்புரையை வழக்கறிஞருக்கு அனுப்பியதாகக் கருதப்படுகிறது.

சுதந்திரமான புலனாய்வுத் துறையில் அரசு தலையிடும் இந்தப் போக்கை பாரதிய ஜனதாவும், கம்யூனிஸ்ட் கட்சியும் கண்டித்துள்ளன. (இ-3)

## இஸ்ரேலியர் ஆர்ப்பாட்டம்

டெல்அவிவ், ஒக். 3

பிரதமர் நத்தனியாகோவின் மத்திய கிழக்கு அணுகுமுறையை கண்டித்தும் —

அமைதி முயற்சியை துரிதப்படுத்தக்கோரியும் — டெல் அவிவில்இஸ்ரேலியர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

சுமார் 30 ஆயிரம் இஸ்ரேலியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

அதேவேளை —

மத்திய கிழக்கு அமைதி முயற்சியை முன்னெடுத்துச் செல்ல அமெரிக்கா அழைப்பு விடுத்த அமைதிப் பேச்சுக்கள் நேற்று முன்தினம் வாஷிங்டனில் ஆரம்பமாகின.

இஸ்ரேலிய பிரதமர் நத்தானியாகோவும், பலஸ்தீனத் தலைவர் யாஸிர் அரபாத்தும் முதன் முறையாக நேரில் சந்தித்துக் கொண்டனர்.

இந்த பேச்சுவார்த்தைகள் குறித்து அமெரிக்கா திருப்தி தெரிவித்துள்ளது. (இ-3)

## வெற்றி

ரஷ்யாவின் லெனின்கிராட் மாகாண ஆளுநர் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் ஹாடின் குஸ்தா வெற்றி பெற்றுள்ளார்.

இதுவரை ஆளுநராக இருந்த ரஷ்ய அதிபர் யெல்ட்ஸினின் முக்கிய ஆதரவாளரான அலெக்ஸாண்டர் வெலியட்கோ படுதோல்வியடைந்துள்ளார்.

வேறு மாகாணங்களிலும் கம்யூனிஸ்ட் வேட்பாளர்கள் வெற்றியடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## உலக அரங்கில்

## பர்மாவில் ஆகாசூகியின் தொலைபேசி துண்டிப்பு

ரங்கோன், ஒக். 3

பர்மிய எதிர்கட்சித்தலைவியான ஆகாசூகிக்கு அந்நாட்டு இராணுவம் தொடர்ந்து தொல்லைகொடுத்துவருகிறது

ரங்கோனில் உள்ள அவரது இல்லத்தில் அவர் தொடர்ந்து வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

தற்போது அவரது தொலைபேசியும் இராணுவத்தால் துண்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பர்மிய மக்கள் ஜனநாயக முன்னணியின் கூட்டம் அவரது இல்லத்தில் நடைபெறவிருந்தது அதைத் தொடர்ந்தே இராணுவத்தினர் புதிய தொல்லைகளைக் கொடுத்து வருவதாகத் தெரிகிறது.

கடந்த 8 ஆண்டுகளாக இராணுவத்தின் தொல்லைகளுக்கு உட்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவியை தமது இரட்சகி என பர்மிய மக்கள் கருதுகின்றனர். (இ-10)

## மதச் சட்டங்களை அமுல்செய்ய ஆப்கானில் சிறப்புக் காவற் படை

காபூல் ஒக். 3

ஆப்கன் தலைநகர் காபூலில் தலிபான் கிளர்ச்சியாளர்களால் அறிவிக்கப்பட்ட கடுமையான மதச் சட்டங்களை அமுல்படுத்த சிறப்புக் காவற் படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பர்தா அணியாத இஸ்லாமியப் பெண்கள் பலரை நடு வீதியில் வைத்து இப்படையினர் நேற்றுக் குண்டாந்தடியால் தாக்கினர் என்றும் —

நாடு முழுவதும் பெண்களின் பள்ளிகள் மூடப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் —

அரசு அலுவலங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் பணி புரிந்து வந்த பெண்களின் தொழில் பார்க்கும் உரிமை பறிக்கப்பட்டு வீட்டில் இருக்குமாறு அவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர் என்றும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

அரசுப் பணியாளர்கள் இராணுவத்தினர் அனைவரும் நீண்ட தாடி வளர்க்க வேண்டும் இல்லையெனில் கடுமையான தண்டனை வழங்கப்படும் எனவும் புதிய அரசு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## இந்தியாவில் கைதாகி உள்ள 5 பிரெஞ்சுக்காரரையும் விடுவிக்கக் கோரிக்கை

பாரிஸ், ஒக். 3

கடந்த 9 மாதங்களாக இந்தியக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள 5 பிரெஞ்சு நாட்டவர்களையும் விடுதலை செய்யுமாறு பிரெஞ்சு வெளியுறவு அமைச்சர் இந்திய வெளியுறவு அமைச்சரிடம் கேட்டுள்ளார்.

போத்துக்கல், சீனா ஆகிய நாடுகளுக்கிடையே 16 ஆம் நூற்றாண்டில் நடைபெற்று வந்த வர்த்தகத்தின் போது பொருள்களை ஏற்றிவந்த கப்பல்கள் கேரளக் கடலில் மூழ்கிக்கிடக்கின்றன.

அவற்றைத் திருடிச் செல்ல வந்ததாகவே இந்த ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் அந்த ஐவரும் பண்டைக்கால வர்த்தகம் தொடர்பாக நேரடி ஆய்வுகளை மேற்கொள்ளவே இந்தியா வந்தனர் என பிரான்ஸ் தெரிவிக்கிறது. (இ-10)

## ரஷ்யாவின் சில பகுதிகளை இணைக்க தலிபான் திட்டம்

### அலெக்சாந்தர் லெபேட் எச்சரிக்கை

மாஸ்கோ, ஒக்ரோபர் 3

ரஷ்யாவின் உஸ்பெஸ்கிஸ்தான், தஜிகிஸ்தான் மாகாணங்களின் சில பகுதிகளை ஆப்கானிஸ்தானுடன் இணைக்க தலிபான் போராளிகள் இரகசியத் திட்டம் வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய ரஷ்ய பாதுகாப்பு சபைத் தலைவர் அலெக்சாந்தர் லெபேட் தலிபான் அரசு மத்திய ஆசியபகுதியின் அமைதிக்குப் பெரும் அச்சுறுத்தலாக உருவாகியுள்ளது. என்றார்.

ஆப்கானிஸ்தானில் ஒழுங்கு நிலை ஏற்பட ரஷ்யா முயற்சி எடுக்கவில்லை என்றால் செச்சின்யாவை விட பன்மடங்கு மோசமான ஒரு பிரச்சினையை சந்திக்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்படும் என்றும் கூறினார். (இ-3)

# தென் பிலிப்பீன்ஸில் 24 வருடகால முஸ்லிம்களின் கிளர்ச்சி முடிவு!

தென் பிலிப்பீன்ஸிலுள்ள மிண்டானோ தீவுக்கு தன்னாட்சி உரிமை வழங்குமாறு கோரி பிரிவினைவாதப் போராட்டம் நடத்தி வந்த முஸ்லிம்களின் ''மோறோ'' தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் நூர் மிசோறி கிளர்ச்சிப் போராட்டத்தை நிறுத்திவிட்டார்.

ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ள வழிவகுக்கும் அமைதி ஒப்பந்தத்தில் தலைநகர் மணிலாவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் கடந்த மாதம் 2 ஆம் திகதி அவர் கைச்சாத்திட்டார்.

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பிடல் ராமோசின் நல்வாழ்த்துக்களின் மத்தியில் கையொப்பமிடப்பட்ட இந்த அமைதி ஒப்பந்தம் அபிவிருத்தியில் வெகுவாகப் பின்தங்கியுள்ள தென் பிலிப்பீன்ஸுக்கு மாத்திரமன்றி தென்கிழக்காசியப் பிராந்தியத்திலுள்ள அனைத்து நாடுகளின் புதிய அபிவிருத்திக்கும், நிலையான அமைதிக்கும் வழிவகுத்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

### 1,20,000 மக்கள் பலி

கடந்த 24 ஆண்டுகளில் சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மக்களைப் பலிகொண்ட உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த இந்த அமைதி ஒப்பந்தத்தை தென் கிழக்காசியாவுக்காக பிலிப்பீன்ஸில் திறக்கப்பட்ட ''முன் கதவு'' என அரசியல் அவதானிகள் வர்ணிக்கின்றனர்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு கிழமை முடிவதற்குள் ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகள் செயல்வடிவம் பெற ஆரம்பித்தன.

அதன் முதல் நடவடிக்கையாக மிண்டானோவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழும் 4 பிரதேசங்களில் இருந்து ஆளுநராக நூர் மிசோறி மக்கள் வாக்குகள் மூலம் தெரிவானார்.

இத்தேர்தலில் அவரை எதிர்த்து எவரும் போட்டியிடாதது அவருக்குக் கிடைத்த வெற்றியாகும்.

மேலும் அவர் ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்டதானது போர் நடவடிக்கைகள். இறுதியில் ஓர் அமைதியைத் தேடித்தந்த ஒரு சிறப்பான வெற்றியாக அமைந்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது எனக் கூறப்படுகிறது.

முன்னாள் இராணுவத்தளபதியான தற்போதைய பிலிப்பீன்ஸ் ஜனாதிபதிக்கு வயது 65. இதுவரை இவரை எதிரியாகக் கருதி போராட்டத்தை நடத்தி வந்த நூர் மிசோறிக்கு வயது 55 நூர் மிசோறி மிண்டானோவுக்கு மிகவும் தெற்கே அமைந்துள்ள ஜோலே என்ற தீவில் பிறந்தார் இவரது குடும்பம் மிக வறிய நிலையில் இருந்தது. இவரது பெற்றோருக்குப் பதினொரு பிள்ளைகள்.

> 24 ஆண்டுகளாக பிலிப்பீன்ஸில் இடம்பெற்ற யுத்தத்தில் 1 லட்சத்து 20 ஆயிரம் மக்கள் பலியானார்கள். கடந்த 2-9-1996 இல் அரசுக்கும் கிளர்ச்சித் தலைவருக்குமிடையே கைச்சாத்தான அமைதி உடன்பாட்டைத் தொடர்ந்து உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தது.

கல்வியில் ஆர்வங் காட்டிய நூர் மிசோறி மணிலாவிலுள்ள பிலிப்பீன்ஸ் பல்கலைக் கழகத்தில் தனது பட்டப் படிப்பை மேற்கொண்டார்.

வியட்நாமில் அமெரிக்கா மேற்கொண்டு வந்த யுத்தம், பிலிப்பீன்ஸில் அமெரிக்க இராணுவத் தளங்கள் அமைக்கப்பட்டது, மற்றும் அப்போதைய பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்கோஸுக்கு எதிராக உருவான போராட்டங்கள் ஆகியவற்றில் நூர்மிசோறியின் பங்களிப்பு இருந்து வந்தது.

1968 இல் அரசுக்கு எதிரான போராட்டங்களில் நேரடியாகப் பங்குபற்றுவது என அவர் தீர்மானித்தார்.

மலேசியாவிலுள்ள சபா மாநிலத்தை ஆக்கிரமிக்கும் நோக்குடன் இரகசிய முஸ்லிம் படை ஒன்றுக்குப் பயிற்சி அளித்துவந்த அதிகாரிகளுக்கு எதிராக கிளர்ச்சி மேற்கொண்டுவந்த முஸ்லிம் இராணுவத்தினர் பிலிப்பீன்ஸ் அப்போதைய பிலிப்பீன்ஸ் ஜனாதிபதியால் இந்தப் பயிற்சி அளிக்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

### தொகுப்பு: கஜனி

அரசினால் துடிக்கத் துடிக்க கொல்லப்பட்ட சம்பவம் நூர் மிசோறியின் போராட்ட வாழ்வின் முதல் அத்தியாயமாக அமைந்தது.

சபா மாநிலத்தில் உரிமை பாராட்டவே பிலிப்பீன்ஸ் அரசு அந்த மாநிலத்தை ஆக்கிரமிக்கத் தீர்மானித்தது;

இதன் பின்னர் பிலிப்பீன்ஸில் புதிய அரசமைப்பு சட்டத்தை வரைவதற்காக அரசமைப்புச்சபையைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற தேர்தலில் இடம்பெற்ற ஊழல்கள் காரணமாக அத்தேர்தலில் தோல்வியடைந்த நூர்மிசோறி ஜனநாயக வழிமுறைகளை முற்றிலுமாகக் கைவிட்டார். மிண்டானோவில் வசிக்கும் மோறோ என்றழைக்கப்படும் ஏழை முஸ்லிம்களுக்காக தனியான சுதந்திர இராச்சியம் ஒன்றை அமைப்பதற்காக வன்முறைப் பாதையைத் தேர்ந்தெடுத்தார்.

இதற்காக மோறோ தேசிய விடுதலை முன்னணியை (M N L F) அமைத்தார்.

மணிலா நகரில் அமைந்துள்ள பிலிப்பீன்ஸ் பல்கலைக் கழகத்தில் வகித்து வந்த அரசியல் விஞ்ஞானப் பேராசிரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இப்போதைய இனரீதியான யுத்தத்துக்கு ஆளும் வர்க்கத்தினரே முழுக் காரணம்

## சமாதானத்துக்கான பெண்கள் இயக்கத்தினர் கண்டனம்

பௌத்த சிங்கள இயக்கத்தைக்கட்டி எழுப்புமாறு முன்னாள் சுதந்திரக்கட்சி எம்.பி.எஸ்.எல். குணசேகர அண்மையில் நிகழ்த்திய உரையொன்றில் அறைகூவல் விடுத்திருப்பது குறித்து 'சமாதானத்துக்கான பெண்கள்' இயக்கத்தினர் தமது கடும் ஆட்சேபத்தை அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்திருக்கின்றனர்.

சிவில் சமூகத்தில் இனவாத சித்தாந்தத்தை வளர்த்து விட்டதற்கும், சாதாரண சிங்கள மக்களும் தமிழர்களை பகைவர்களாய், பயங்கர வாதிகளாய் பார்க்கும் அளவுக்கு, இனப்பகைமையைத் தூண்டிவிட்டதற்கும், அரசியல் வாதிகளே பதில் சொல்ல வேண்டியவர்களாவர். ஒரு மோசமான யுத்தம் நிலவிடும் சூழலில், மேலும் மேலும் இனத்துவேசமான கருத்துக்களைப் பரப்புவதானது, சிவில் சமூகத்தை மென்மேலும் சீர் குலைப்பதாகவே அமைந்துவிடும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. சமாதானத்துக்கான பெண்கள் இயக்கத்தினரின் அந்த அறிக்கையை இங்கு தருகிறோம்.

'சிங்கள பௌத்தர்களின் நலன்களைக் காப்பதற்கான மூன்றாவது சக்தியாக சிங்கள பௌத்த இயக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்' என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான திரு. எஸ்.எல். குணசேகர கூறியுள்ளார்.

''நடைபெற்று வரும் இந்த பயங்கரவாத நடவடிக்கைகளினால் அகதிகளாக்கப்பட்டிருக்கும் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையிலான வித்தியாசம் என்ன? பாதிக்கப்பட்ட இந்த தமிழர்கள் பலரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ எல்.ரி.ரி.ஈயினருக்கு உதவியும், ஒத்துழைப்பும் வழங்கி வருகின்றனர். இல்லாவிடில் எல்.ரி.ரி.ஈயினரால் இவ்வளவு தூரத்திற்கு வளர்ச்சியடைந்திருக்க முடியாது.

''இதற்கு முரணாக சிங்கள அகதிகள் பயங்கரவாதத்தைத் துடைத்தழிப்பதற்காக இலங்கை இராணுவத்தினருடன் தோளோடு தோள் நின்று போராடியவர்கள் ஆனால் அவர்களது இன்றைய நிலை என்ன?

'' சிங்களவர்கள் இன்று முகங்கொடுக்கும் பல்வேறு கஷ்டங்கள் பற்றி யாரும் குரல் கொடுப்பதில்லை. இவற்றை நாம் சுட்டிக்காட்டும் போது நாம் இனவாதிகள் என முத்திரை குத்தப்படுகிறோம். ஆனால், தமது ஐதீகமான பாரம்பரிய தாய்நாட்டிற்காக போராடிக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கு இந்த அளவுகோல்கள் பொருத்தப்படுவதில்லை.

'' கெப்பித்திகொல்லாவையில் மாத்திரம் சிங்களவர்களின் 20 வரையிலான சிறு கிராமங்கள் எல். ரி. ரி. ஈ. யினால் தாக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 2500 சிங்களவர்கள் அகதி முகாம்களில் வாழ்கின்றார்கள். வெலி ஓயாவில் முன்பு 3362 சிங்களக் குடும்பங்கள் வாழ்ந்தன. அதில் அரைவாசிப்பேர் தமிழ் கெரில்லா யுத்தத்தினால் இறந்து போனார்கள்; அல்லது வெளியேறி விட்டார்கள்.

'' இந்தப் பகுதியில் ஆறு அரசாங்கப் பாடசாலைகளே உள்ளன. இவற்றில் மொத்தமாக 38 ஆசிரியர்களே உள்ளனர் அவர்களின் மாதச் சம்பளம் மாதத்திற்கு 1250 ரூபாவாகும். அதாவது நாளுக்கு 40 ரூபா. ஆனால் அமைச்சர் தொண்டமானின் தொழிலாளர்கள் நாளுக்கு 80 ரூபாய்களைப் பெற்றுக் கொள்கின்றனர்'' என்று எஸ் எல். குணசேகரா பத்திரிகை அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

அவரின் கருத்துக்களை சமாதானத்திற்கான பெண்களான நாம் இவ்விடத்தில் சீர்தூக்கிப்பார்க்க விரும்புகிறோம். எஸ். எல். குணசேகர குறிப்பிடும் சிங்கள அகதிகள், தமிழ் கெரில்லாக்களின் தாக்குதல்களுக்கு அடிக்கடி உள்ளாகும் எல்லைப்புறக் கிராமங்களில் வாழும் சிங்கள மக்களாகும்.

### குடியேற்றத்தின் விளைவு

எல்லைப்புறக் கிராமங்கள் என்பவை இன்று இந்நாட்டின் குறிப்பான கவனத்தை ஈர்ப்பவையாக இருக்கும் அதேநேரம் அவை தமக்கான குறிப்பிட்ட வரலாற்றையும் கொண்டுள்ளன. சிங்கள அரசியல் வாதிகள் தமது சொந்த அரசியல் நலன்களுக்காக புத்தளம் தொடங்கி அம்பாறை வரையிலான காட்டுப்பகுதிகளில் வரண்ட வலயக் குடியேற்றம் என்னும் பெயரில் தென்னிலங்கையின் மத்திய பிரதேசங்களில் வாழ்ந்து வந்த சிங்கள மக்களை பல உறுதி மொழிகளையும், ஆசை வார்த்தைகளையும் கூறி குடியமர்த்தினார்கள்.

தமது சொந்த வாழ்விடங்களில் வறுமையுடன் போராடிக் கொண்டிருந்த அப்பாவி சிங்களக் கிராமிய விவசாயிகள் ஒளிமயமான எதிர்காலம் நோக்கி தமக்கு அறிமுகமேயில்லாத பகுதிகளுக்கு நகர்ந்தனர். ஆனால் இருந்ததையும் விட அவர்களது வாழ்வு மோசமானதைத்தான் இறுதியில் அவர்களால் காண முடிந்தது.

ஆரம்பகால குடியேற்றவாசிகளுக்கு அவர்களைக் கவர்வதற்காக அரசியல்வாதிகளால் சலுகைகள் பல செய்து கொடுக்கப்பட்டாலும் நாள் செல்லச் செல்ல அவை மறைந்து அம்மக்களும் மறக்கப்பட்டுப்போயினர்.

எல்லையோரக் கிராமங்களின் வரட்சிபற்றிக் கூறத் தேவையில்லை தண்ணீர் இன்மை, முறையாக விவசாயம் செய்ய முடியாமை' காட்டு யானைகளினாலும் பாம்புகளினாலும் தொல்லை, ஒழுங்கான உணவின்மை, இருப்பிட வசதியின்மை, சுகாதார மருத்துவ வசதியின்மை, போக்குவரத்திற்கு வாகனங்களின்மை, அடிப்படைக் கல்வியைக்கூட முறையாகப் பெற்றுக்கொள்ள வாய்ப்புகளின்மை ...இப்படியாக இம்மக்களின் வறுமை பற்றி அடுக்கிக்கொண்டே போகலாம்.

### அரசியல் வாதிகளின் பலிக் கடாக்கள்

இத்தனை துயரங்களுக்கும் மத்தியில் தமது அரசியல் நலன்களுக்காக இவ் அப்பாவி ஏழை விவசாயிகளை பலிக்கடாக்களாக்கிய அரசியல் வாதிகள் இன்று வரையில் தமது அரசியல் ஆடுகளத்தில் இம்மக்களைப் பகடைக்காய்களாய்த்தான் பாவிக்கிறார்களேயன்றி அம்மக்களின் நலன் பற்றி ஏதும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

எல்லைப்புறக் கிராமங்களில் வாழும் சிங்கள மக்கள் மாத்திரமன்றி இந்நாட்டின் கிராமங்களில் வாழும் பெரும்பான்மையான சிங்கள மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் பல துயரங்களுடன் வாழ்கிறார்கள் என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

எல்லைப்புறக் கிராம மக்கள் பற்றி எஸ். எல். குணசேகர கூறும் விடயங்களுடன் நாம் உடன்படுகிறோம். ஆனால் அவர் அவற்றை வெளிப்படுத்தும் முறைதான் தவறானது. இன்று இந் நாட்டில் ஒரு இனரீதியான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு அடிப்படைக் காரணமானவர்கள் ஆளும் வர்க்கம் சார்ந்த சிங்கள அரசியல்வாதிகளே.

இன்றைய நெருக்கடிச் சூழவில் மொத்த தமிழ் மக்களும் முகங் கொடுக்கும் குறிப்பான பிரச்சினைகளையும் சிங்கள மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளையும் குழப்பிக் கொள்வது எவ்விதத்திலும் பகுத்தறிவு சார்ந்ததல்ல. தமிழர்கள் தாம் ஓர் இனமாக இருப்பதால் வர்க்க வேறுபாடின்றி தம்மீதான ஒடுக்குமுறைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

சிங்கள மக்கள் தமக்குள் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் எனும் வகையிலேயே ஒடுக்கு முறைகளுக்கு முகங் கொடுக்கின்றனர். எல்லைப்புறக் கிராமங்களில் படுகொலைகளுக்குள்ளாகும் சிங்கள மக்கள் தமது வர்க்க நிலைமையின் காரணமாக சிங்கள அரசியல் வாதிகளினால் அந்நிலைக்கு தள்ளப்பட்டவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

### பரிசீலிப்பு முறை

இந் நிலையில், சிறுபான்மை இனங்கள் எனும் காரணத்தினால் ஒடுக்குமுறைக்குள்ளாகும் தமிழ். முஸ்லிம் மக்கள், சுரண்டப்படும் வர்க்கத்தைச் சார்ந்த சிங்கள மக்கள் ஆகியோரின் பிரச்சினைகளை அந்தந்த தளங்களில் வைத்துப் பரிசீலிக்க வேண்டும்.

சிங்களவர்களின் நலன்களைக் காப்பதற்காக பௌத்த சிங்கள இயக்கத்தைக் கட்டியெழுப்புவது, பாதிக்கப்பட்ட தமிழர்கள் எல். ரி. ரி. ஈ. யினருக்கு மறைமுகமாகவோ நேரடியாகவோ உதவி செய்பவர்கள் என்பது. தொண்டமானின் தொழிலாளர்கள் எல்லைப்புறக் கிராம ஆசிரியர்களை விட அதிக சம்பளம் பெறுகிறார்கள் எனும் கருத்துக்கள் யாவும் நேர்மையான அரசியல் கண்ணோட்டத்திலிருந்து பிறப்பவையல்ல என்பதை நாம் சுட்டிக் காட்டவிருக்கிறோம்.

சிவில் சமூகத்தில் இனவாத சித்தாந்தத்தை வளர்த்து விட்டதற்கும், சாதாரண சிங்கள மக்களும் தமிழர்களை பகைவர்களாய் பயங்கரவாதிகளாய் பார்க்குமளவுக்கு இனப்பகைமையைத் தூண்டி விட்டதற்கும் அரசியல் வாதிகளே பதில் சொல்ல வேண்டியவர்களாவர்.

ஒரு மோசமான யுத்தம் நிலவிடும் சூழலில் மேலும் மேலும் இனத்துவேஷமான கருத்துக்களைப் பரப்புவதானது சிவில் சமூகத்தை மென்மேலும் சீர் குலைப்பதாகவே அமையும்.

இந் நாட்டு மக்களின் சமாதான வாழ்வுக்கு அழுத்தம் கொடுப்பவர்கள் அதற்காக செயற்படுபவர்கள் எனும் வகையில் சமாதானத்திற்கான பெண்களான நாம் எஸ். எல். குணசேகரவின் கருத்துகளை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஓர் அரசியல்வாதி எனும் வகையில் இந் நாட்டில் வாழும் மக்கள் அனைவரின் துயரங்களையும் அனுதாபத்துடன் அணுகி நேர்மையான முறையில் அவற்றைத் தீர்த்து வைக்க முனையாமல், துவேஷ உணர்வுகளைக் கிளறி விடும் எஸ். எல். குணசேகரவிடமும், அவர் போன்றவர்களிடமும் நாம் கேட்டுக் கொள்வதெல்லாம், அவர்களின் சொந்த அரசியல் நலன்களுக்காக மீண்டும் மீண்டும் மக்களைப் பலியாக்க வேண்டாம் என்பதைத்தான்.

★

---

## அனைவருக்கும் உளநலம் - 03

### பாலியல் - அஞ்ச வேண்டிய ஒன்றல்ல

★ பசி, தாகம் போல பாலியல் தேவையுல் இயல்பான ஒன்றே.

★ சுயபாலின்ப நுகர்வும் ஆரோக்கியமானதொரு பாலியல் வெளிப்பாடே.

★ பெரும்பாலான பாலியல் பிரச்சினைகள் உளம் சார்ந்தவையாகவும், தீர்க்கப்படக் கூடியவையாகவுமே உள்ளன.

★ வலிந்து அடக்கி ஒடுக்கப்படும் பாலியல் தேவைகள், மனக்குழப்பமாக வடிவம் பெறலாம்.

★ பாலியல் தொற்று நோய்களையிட்டு — குறிப்பாக எயிட்ஸ் — மிகவும் எச்சரிக்கையாக இருப்போமாக.

---

## இடம்பெயர்ந்தோரின் பிறப்புச் சான்றிதழ்கள் பெருமளவு தேக்கம்

வடமராட்சி ஒக். 3

கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையான ஆறு மாதங்களில் மந்திகை வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ்கள் மந்திகை வைத்தியசாலை பதிவாளரிடம் தேங்கிக்கிடப்பதாக தெரிவிக்கப்பட்டது.

வலிகாமம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் தங்கியிருந்த சமயம், மந்திகை வைத்தியசாலையில் பிறந்த பிள்ளைகளுக்கான பதிவுகளை வடமராட்சி பிறப்பு, இறப்புப் பதிவாளரே பதிந்திருந்தார்.

இந்தப் பிறப்புச் சான்றிதழ்கள் உரியவர்களுக்கு தபாலில் அனுப்பப்பட்டதாகவும்-குறிப்பிட்ட விலாசதாரர் இல்லாததால் அவை திரும்பி வந்துள்ளதாகவும் உரியவர்கள் வைத்தியசாலையில். வந்து அவற்றைப் பெறலாம் என்றும்- வைத்தியசாலைப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

(இ-173

---

தன்னைச்...

( 3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியப் பிரதேசத்தில் உள்ள நாற்பது எண்ணெய் வயல்களை ''என்ரோன் — நிலையன்ஸ்கூட்டமைப்புக்கு'' குறைந்த தொகைக்கு குத்தகைக்கு வழங்கியது.

— இவ்வாறு நரசிம்மராவ் எதிர்கொள்ளப்போகும் குற்றச்சாட்டுகள், விசாரணைகள் போன்றவற்றின் பட்டியல் நீண்டுகொண்டு போகின்றது.

இந்தத் தள்ளாத வயதில் இவற்றுக்கு முகங் கொடுத்து— எதிர் நீச்சல் போட்டு — தப்பிப் பிழைப்பாரா ராவ்?

காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

★

---

## மருந்து யாருடையது?

புற்று நோய்க்கு பயன்படுத்தப்படும் பெறுமதி மிக்க குறிப்பிட்ட தொகை மருந்து நல்லூர் சுற்றாடலில் வீழ்ந்து கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டு மருந்துவர் ஒருவரால் உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெறலாம்.

(உ)

---

## காரை நகரில் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 3

காரைநகர் ஸ்ரீபாரதி பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக ஊர் காவல்துறை உதவி அரச அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகமும், சிறப்பு விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர்ப்பொறுப்பாளர் என். லோகனும் கலந்து கொள்வார்கள்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய ரக பியட் (FIAT) கார் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். வியாழன், சனி ஆகிய நாள்களில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிக்குள் நேரில் பார்வையிடலாம். முகவரி: 28, குமாரசுவாமி வீதி, கந்தர்மடம்.
(சி/3204)

சுன்னாகம், சூராவத்தை அம்மன் கோவிலுக்கு அண்மையில் எனக்குச் சொந்தமான சிறிய வீடு, வளவு, கிணறு, -4½ பரப்பு விற்பனைக்குண்டு. நியாயமான விலைக்கு விற்கப்படும். தொடர்பு:- சுவாமி சித்ரூபானந்தா, ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை. (C/3217)

### படங்கள் வந்துவிட்டன

01-08-96 ஆம் திகதிக்கு முன்னர் எம்மால் எடுக்கப்பட்ட கலர்ப்படங்கள் கொழும்பில் கழுவப்பட்டு தயார்நிலையில் உள்ளன. உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவும். அஜந்தா போட்டோ & வீடியோ, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42938)

### நூல் நிலையம்

ஈழத்து, தமிழக எழுத்தாளர்களின் சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள், சிறுவர் இலக்கியங்களை வாசித்து மகிழ்ந்து பயனடைய வாருங்கள். லிங் லெண்டிங் லைப்ரரி, Ling Lending Library. இல: 41, தபாலக வீதி, சாவகச்சேரி. 'புத்தகங்களுக்குத் தரும் தொகை செலவல்ல - மூலதனமே.' (42689)

### காணவில்லை

24053551 இலக்கமுடைய லுமாலா சைக்கிள் (பெண்களுக்குரியது) 30 - 09 - 96 அன்று தட்டாதெருச் சந்தியில் ஏற்பட்ட அசம்பாவிதத்தின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. கணேஸ், இல. 24A, நாவலடி லேன், வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். (42958)

### கண்டெடுக்கப்பட்டது

இரத்தினசபாபதி சபாநாதன் என்னும் பெயரையுடைய 301331258 V இலக்க அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. தொடர்பு: R. மகாலிங்கம், இல. 226, பலாலி வீதி, கந்தர்மடம் (பேபி போட்டோ முன்பாக). (42963)

### வள்ளுவர் வகுத்தவழி

சர்வதேச நல்லொழுக்க தினம் - ஒக்ரோபர் -3, ''வள்ளுவர் வகுத்த வழி'' என்ற நூலைப் பெற்றுக்கொள்ள - சிக்கனத்திற்கும், துரித சலவைக்கும் நுரைவளம் கூடிய மில்க்வைற் சலவைப் பவுடரைப் பாவித்து. வெற்றுப் பக்கற் 10 அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். ''மில்க்வைற்''
(C/3218)

### வீடு வாடகைக்கு

யாழ் ஆஸ்பத்திரிக்கும், பல்கலைக்கழகத்துக்கும் இடையில் பிரதான வீதியில் 2 வரவேற்பு மண்டபம், 5 அறை, 2 குளியலறை, 2மலசலகூடம், தனியான கிணறு கொண்ட, தனியான வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு:- மே./பா. இல.535, உதயன் பணிமனை.
(42976)

# தென் பிலிப்பீன்ஸில் 24 வருட . . .

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யர் பதவியைத் துறந்தார்.

நூர் மிசோறியும் மற்றும் 89 பேரும் மலேசியாவிலுள்ள சபா மாநிலத்தில் கெரில்லாப் பயிற்சிகளைப் பெற்றனர்.

1972 இல் அப்போதைய பிலிப்பீன்ஸ் ஜனாதிபதியான மார்க்கோஸ் நாட்டில் யுத்தப் பிரகடனத்தை அமுல் செய்த போது நூர் மிசோறியின் விடுதலை முன்னணியும், அதன் இராணுவப் பிரிவான பங்சா மோறோ இராணுவமும் வெளி நாடுகளின் உதவியுடன் கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டன. அன்றிலிருந்தே அரச படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் மோதல்கள் ஆரம்பித்தன. இது உள்நாட்டு யுத்தமாக மாறி 24 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது. இதனால் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் உயிர்கள் பலி கொள்ளப்பட்டன.

பிலிப்பீன்ஸ் நாட்டில் மாத்திரமன்றி மிண்டானோ தீவிலும் கத்தோலிக்கர்களே பெரும்பான்மையினராவர். எனினும் பிலிப்பீன்ஸ் நாட்டில் வாழும் சுமார் 50 இலட்சம் முஸ்லிம்களில் அதிகமானோர் மிண்டானோ தீவிலேயே வாழ்கின்றனர்.

முஸ்லிம்கள் மிண்டானோ தீவைத் தங்கள் பாரம்பரிய தாயகமாகவேகருதுகின்றனர்.

இருப்பினும் 300 ஆண்டுகளாக ஸ்பானிய மற்றும் அமெரிக்க ஆக்கிரமிப்பின் போது தென் பிலிப்பீன்ஸில் கிறிஸ்தவர்களின் ஆதிக்கம் மேலோங்கிய காரணத்தினாலும், அவர்கள் அங்கு குடியேறியதாலும் மிண்டானோவில் முஸ்லிம்கள் சிறுபான்மையிராகினர்.

மிண்டானோ தீவில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் 4 மாநிலங்களுக்கே நூர் மிசோறி தற்போது ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### 1998 இல் மக்கள் கருத்துக் கணிப்பு

இதற்கிடையில் இந்த 4 மாநிலங்கள் உட்பட 14 மாநிலங்களுக்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கப்படுவதற்கு 1998 இல் மக்கள் கருத்துக் கணிப்பு எடுக்கப்பட வேண்டும் என்பது கைச்சாத்திடப்பட்டுள்ள அமைதி ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனையாகும்.

தன்னாட்சி பெறும் மாநிலங்கள் ஒன்றுடன் ஒன்று இணைவதா? இல்லையா? என்பது அங்கு வாழும் மக்களின் விருப்புரிமையாகும்.

இந்தப் புதிய ஒழுங்கிற்கமைய நூர் மிசோறிக்கு ஆளுநர் பதவி கிடைத்துள்ளதுடன் மேற்குறிப்பிட்ட 14 மாநிலங்களின் அபிவிருத்திகளை நெறிப்படுத்தும் சபையிலும் அவரது விடுதலைமுன்னணியே முக்கிய இடத்தை வகிக்கிறது.

கிளர்ச்சித் தலைவர் நூர் மிசோறி ஜனதிபதி ராமோஸுடன் உடன்பாட்டுக்கு வந்தவுடன் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிட்டன எனக் கூறமுடியாது. இந்த இருவரும் இரு முனைகளில் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.

நூர் மிசோறிக்கும், ஜனாதிபதி ராமோஸுக்குமிடையே உருவான உடன்பாட்டை மிண்டானோவில் உள்ள கத்தோலிக்கப் போராளிகள் விரும்பவில்லை. மற்றைய இரு முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களான மோறோ இஸ்லாமிய விடுதலை முன்னணி (M. I. L. F.) மற்றும் அபுசாயிப் தலைமையிலான முஸ்லிம் குழு ஆகியன அமைதி ஒப்பந்ததிற்கு எதிராகப் போராடுவதென அறைகூவல் விடுத்துள்ளன.

முஸ்லிம் தீவிரவாதிகளையும், கத்தோலிக்க தீவிரவாதிகளையும் ஒரே நேரத்தில் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை நூர் மிசோறிக்கு உருவாகியுள்ளது. இப் போராளிகளின் எதிர்ப்பை அடக்க (பா)ரிய அளவு பொலிசார் வேண்டுமென நூர் மிசோறி தெரிவித்துள்ளார்.

நூர் மிசோறி தனது இனத்தை ஜனாதிபதி ராமோஸிடம் தாரைவார்த்துவிட்டார் என முஸ்லிம் தீவிரவாதக்குழுக்கள் கூறுகின்றன.

### கத்தோலிக்கர்கள் அச்சம்

இதற்கிடையில் மிண்டானோ தீவு முஸ்லிம் சட்டங்களின் படி நிர்வகிக்கப்படுவதால் அங்கு முஸ்லிம் கலாசாரமே பரவும் என அங்குள்ள கத்தோலிக்கர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

மணிலாநகரில் உள்ள கத்தோலிக்க ஆட்சியாளர்கள் எதைக் கூறினாலும் மிண்டானோ முஸ்லிம்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அரபு மொழியைக் கற்பிக்க மறந்துவிடவில்லை.

அண்மையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் முஸ்லிம் மாணவர்கள் அரபு மொழியை கற்பதில் உள்ள இடையூறுகள் களையப்பட்டு மேலும் வசதிகள் அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி மிண்டானோவில் அமைதி உருவாகிய பின்னர் அங்கு முதலீடுகளைச் செய்யவுள்ள அரபு நாட்டு நிறுவனங்களின் வங்கிக் கடன்களுக்கு வட்டி அறவிடுவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைதி உடன்படிக்கை கைச்சாத்தாகி ஒரு கிழமை முடிவடைவதற்குள் நூர் மிசோறி ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்டது ஜனநாயக வழியில் அபிவிருத்தி நடவடிக்கையில் ஏற்பட்ட முதற் பணி எனக்கருதப்படுகிறது.

ஜனாதிபதியும் நூர்மிசோறியும் பங்குபற்றிய வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் மற்றுமொரு முக்கிய தீர்மானம் முன்வைக்கப்பட்டது. அந்தத் தீர்மானத்தை, நூர் மிசோறிக்கு கத்தோலிக்கர்களால் ஏற்படக் கூடிய சவால்களுக்கான பதில் எனக் கருதலாம்.

நூர் மிசோறி ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே —

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மிண்டானோ தீவின் புனர் நிர்மாண நடவடிக்கைகளுக்கு 120 கோடி அமெரிக்க டொலர்களைச் செலவு செய்ய ஜனாதிபதி தீர்மானித்த பின்னரே —

வர்த்தகர்களும், முதலீட்டாளர்களும் மிண்டானோவில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்தனர்.

யுத்தம் என்ற பூதத்தை தற்போது போத்தலுக்குள் விட்டு அடைத்துவிட்டாயிற்று எனவும், தனது பொருளாதார அபிவிருத்திப் பணிகளுக்கு பெரும்பான்மையினரான கத்தோலிக்கர்களின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் நூர் மிசோறி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மிண்டானோ தீவை வட பிலிப்பீன்ஸைப் போல செழிப்புள்ள பிரதேசமாக 10 ஆண்டுகளுக்குள் தான் ஆக்கவுள்ளதாகவும்—

இதுவே கத்தோலிக்க மக்களுக்கு தான் வழங்கவுள்ள சிறந்த பரிசாக அமையும் எனவும்— நூர் மிசோறி அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் கத்தோலிக்க வர்த்தகர்களும், முதலீட்டாளர்களும் முக்கிய இடம் வகித்தனர். கத்தோலிக்க மக்களின் அச்சத்தை போக்கும் நோக்கிலேயே நூர் மிசோறியும் ஜனாதிபதியும் அக்கூட்டத்தில் இணைந்து பங்குபற்றியதாகக் கருதப்படுகிறது.

நூர் மிசோறி ஆளுநராகப் பதவியேற்ற போது கத்தோலிக்க — முஸ்லிம் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டு அந்த அந்தகார, இரத்த ஆறு ஓடிய யுகம் இனித் தேவையில்லை எனக் குறிப்பிட்டார்.

### சமாதானத்திற்கான அழைப்பு

முதலீட்டாளர்களின் கூட்டத்தில் உரையாற்றிய மிண்டானோ வர்த்தக சபையின் தலைவர் செபஸ்தியன் அங்கிலியொங்கோ பின்வருமாறு தெரிவித்தார்.

''உண்மையில், பூரண அமைதி உருவாகவில்லை. இருப்பினும் வர்த்தகர்கள் தங்களுக்கு கிடைத்துள்ள வாய்ப்புக்களையே பார்ப்பார்கள், சமாதானத்தை உருவாக்குங்கள், செய்ய வேண்டியவை பற்றி நாம் அறிவோம்'' என்றார்.

53 கோடியே 80 இலட்சம் அமெரிக்க டொலர்களை மிண்டானோவில் முதலீடு செய்ய வர்த்தக சபை முன்வந்துள்ளது. (இ-10)

---

## யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**புதிய பிரிவு O|L**

மீட்டல் வகுப்பு

**ஆரம்பம்:**

**05 - 10 - 96** சனி மாலை 3.00 மணி

அனுமதியை உறுதி செய்து கொள்ளவும்.

நிர்வாகம்

(42974)

---

வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கம்

## அறிவித்தல்

**1-10-1996** ஆம் திகதியில் இருந்து ஆயிரம் (1000) சுருட்டு சுருட்டுவதற்கு இருநூற்றி ஐம்பது ரூபா **250/-** சம்பளம் வழங்குவதென சகல சுருட்டுத் தயாரிப்பாளர்களும் சம்மதம் தெரிவித்துள்ளார்கள். இச் சம்பள உயர்வை சகல தொழிலாளர்களும் சரிவரப் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

S. S. சச்சிதானந்தசிவம்
தலைவர்.

[42973]

---

## ஆத்மசாந்திக் கிரியை அழைப்பும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அமரர் சதாசிவம் நமசிவாயம்

(நமசியண்ணா)

அல்வாய் சதாபொன்ஸ் ஸ்தாபகர் சதாசிவம் நமசிவாயம் அவர்களது ஆத்மசாந்திக்கிரியை 04- 10 -'96 வெள்ளிக்கிழமை காலை வீட்டில் நடைபெறும். தொடரும் மதிய போசனத்திற்கும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

''சதாபொன்ஸ்''
அல்வாய்.

(சி-3216)

---

## ஆத்மசாந்தி பூசைப்பலி



## ஆ. றொ. மனுவல்பிள்ளை

அச்சுவேலியை சேர்ந்த பாடசாலை அதிபரும், ஒரு கால கிராமச்சங்கத் தலைவருமாகிய திரு. ஆ. றொ. மனுவல்பிள்ளை அவர்கள் 4- 9 - 1996 அன்று கனடாவில் அவரது மகளின் இல்லத்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நவரஞ்சிதமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிராசா, பிரகாசம், மரியரத்தினம், பொன்மணி, ராசாத்தி ஆகியோரின் மூத்த சகோதரரும், அருமைத்துரை, இராசமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் ஆகியோரின் மாமனாரும், சாந்திக்குமார், தர்ஷினி, சசிகலா, பிறான், ஏட்ரியன், சுஜித்திரா ஆகியோரின் பேரனுமாவார்.

இவரின் ஆத்ம சாந்திக்காக சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் நாளை (4 - 10 - 1996) காலை 6 மணிக்கு பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தயவாக கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
M. A. S. அருமைத்துரை
(மகன்)

281, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(42940)

உதயன்

## மறைந்திருக்கும் கொலையாளிகள்

சிறுவன் ஒருவன் தனது கையில் வைத்திருந்த தேங்காய் தவறி விழுகிறது. தேங்காய் விழுந்த இடத்தில் மறைந்து கிடந்தது மிதிவெடி. அது வெடித்துச் சிறுவன் இறந்து போனான்.

பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்காகத் தோட்டம் கொத்திக்கொண்டிருந்தார் ஒருவர். அவரது மண்வெட்டி மிதிவெடியில் பட்டு அது வெடித்ததில் அவர் காயமடைந்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் மிதிவெடிகளில் சிக்கிக் காலை இழப்போர், காயமடைவோர், இறந்துபோவோர் பற்றிய செய்திகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலை மிகவும் பயங்கரமானது.

போரினால் மக்கள் அழிகிறார்கள். சொத்துக்கள் — உடைமைகள் — அழிகின்றன. மக்கள் இடம்பெயர்கிறார்கள். சொல்லொணா அவலங்களையும் துன்பங்களையும் அனுபவிக்கிறார்கள். பலவித துன்புறுத்தல்களுக்கு, இம்சைகளுக்கு ஆளாகிறார்கள்.

இவை எல்லாவற்றையும் விடக் கொடூரமானது கால்களை, கைகளை இழந்து ஊனமுற்றோர்களாக, அங்கவீனர்களாக வாழ்வது. உயிர் பிரியும் வரை உழல்கின்ற வாழ்க்கை அது.

குடாநாட்டில் மிதிவெடிகளில் சிக்கி கை கால்களை இழக்கும் பொதுமக்கள், குழந்தைகள், சிறுவர்களின் எண்ணிக்கையை நோக்கும் போது இங்கு அங்கவீனர் சமூகம் ஒன்று பெருகி விடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

போர் தீவிரமாக நடந்த வேளை குடாநாட்டில் இரு தரப்பாரும் விதைத்த கண்ணிவெடிகள் இப்போது பொதுமக்களையே பதம் பார்த்து வருகின்றன!

விமானம் வந்தால் இரைச்சல் மூலம் குண்டு வீச்சு நடக்கப்போவதை அறியலாம் ஷெல்லும் சத்தத்துடன் தான் வந்து வெடித்துச் சிதறும். ஆனால் மிதிவெடி எங்கே இருக்கிறது என்று கண்ணுக்கோ, காதுக்கோ முன்னுணர்வு தராமல் திடீரென வெடித்துக் கொள்ளும்; காயமுறச் செய்யும்; அங்கவீனராக்கும்.

மறைந்திருக்கும் கொலையாளிகள் என்று மிதிவெடிகளை வர்ணித்திருக்கிறார் அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன்.

வீட்டில், வீதியில், வேறு இடங்களில் மிதிவெடி எங்கே கிடந்து, எப்போது வெடித்து எத்தனை பேருக்குப் பாதிப்பு உண்டாக்கும் என்பதனைக் கூறமுடியாத படுபயங்கரம் இது.

ஆனால் மிதிவெடிக் கொலையாளிகளிடமிருந்து குடாநாட்டு மக்களைப் பாதுகாக்க உருப்படியான, திட்டமிடப்பட்ட, ஒழுங்கு சீரான நடவடிக்கை எடுக்கப்படுவதாக இல்லை.

சண்டை உக்கிரமாக நடந்த பகுதிகளில் கண்ணிவெடிகளைக் கண்டுபிடித்து அழிப்பதற்கு விசேட செயலணி ஒன்று குடாநாட்டில் தேவை. மக்கள் தமது சொந்த வீடுகளில் அச்சமின்றி மீளக் குடியமர்வதற்கு, ஏற்கனவே மீளக் குடியமர்ந்தவர்கள் அச்சமின்றி வீடுகளிலும் வீதிகளிலும் நடமாடுவதற்கு மிதிவெடிக் கொலையாளிகளை அழிப்பது மிகமிக அவசியம்.

# பாதுகாப்பு அரணுக்கு 50 மீற்றருக்கு அப்பால் விவசாயம் செய்ய அனுமதி

வடமராட்சி, ஒக். 3

வடமராட்சிப் பகுதியில் பாதுகாப்புப் படையினரின் அரண்களில் இருந்து 50 மீற்றர்களுக்கு அப்பால் விவசாயம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரஜைகள் குழுத்தலைவர் திரு. அ பசுபதி பாதுகாப்பு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுகளில் இது குறித்து முடிவு எடுக்கப்பட்டது.

பாதுகாப்பு அரண்களின் இரு மருங்கிலிருந்தும் 150 மீற்றர் தூரத்துக்கு அப்பால் விவசாயம் செய்ய வேண்டும் என்ற பணிப்பினால் விவசாயிகள் பெரிதும் கஷ்டமடைவதாக பிரஜைகள் குழுத் தலைவர் எடுத்துக் கூறியதை அடுத்து புதிய நடைமுறைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

பிரஜைகள் குழுத் தலைவர் நடத்திய இப் பேச்சுக்களின் போது பின்வரும் விடயங்களுக்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ கடற்றொழில் தடை செய்யப்பட்டிருந்த மையால் தொழில் இழப்புக்காக கடந்த ஜூலை மாதம் தொடக்கம் ஆயிரத்து 500 மீனவ குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை பிரதேச செயலகம் ஊடாக இந்தக் கொடுப்பனவு விரைவில் வழங்கப்படும்.

★ தினமும் காலை 6.45 மணிக்கு ஆரம்பமாகும்—பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக் கிடையேயான — துரித பேருந்துச் சேவை சில நாள்களாக மூத்த விநாயகர் கோயிலடியில் பாதுகாப்புக் கருதி இரு மணித்தியாலங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்பொழுது எவ்வித தடையுமின்றி தொடர்ந்து பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ பனை மரங்கள் அழிப்பது பற்றி ஆராயப்பட்டு, இனிமேல் அத்தகைய நடவடிக்கைகள் இடம் பெறாது நிறுத்தப்பட்டுள்ளது.

★ காணாமற் போனவர்கள் பற்றி ஆராய்ந்த பொழுது அவர்கள் பற்றிய விவரங்களை திரட்டித் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3-173)

## ஸ்ரான்லி வீதியில் கூ. மொ. வி. கிளை

யாழ்ப்பாணம், ஒக். 3

கூ. மொ. வி. நிறுவனத்தின் மொத்த விற்பனை நிலையக் கிளை ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கிளையை கப்டன் மரிக்கார் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தார்.

கூ. மொ. வி. நிறுவன பிராந்திய முகாமையாளர் லலித் முள்வேகமவும், பாதுகாப்பு அதிகாரி கருணாரத்தினவும் இந்த வைபவத்தில் பங்கு பற்றினர். (இ-3)

## ரணில் லண்டனுக்கு

பிரிட்டனின் ஆளும் கட்சியான கொன்சாவேடிவ் கட்சியின் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ள ஐ. தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று லண்டன் பயணமானார். லண்டன் பயணத்தின் பின் அவர் ஜேர்மனிக்கும் விஜயம் செய்யவுள்ளார். (உ-10)

## இலக்கத் தகடுகள்

தென்மராட்சி, ஒக். 3

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் இவ்வருடத்துக்கான துவிச்சக்கர வண்டி இலக்கத்தகடுகள் வழங்கப்படவுள்ளன.

பொதுமக்களின் வசதிகருதி சாவகச்சேரி நவீனசந்தையில் விசேட கரும பீடம் அமைக்கப்பட்டு இன்று தொடக்கம் இலக்கத் தகடுகள் வழங்கப்படுமென நகரசபைச் செயலாளர் சி. நடராசா தெரிவித்தார். (அ-117)

## கால்நடைப் புல்

கால்நடை வளர்ப்போர் நன்மை கருதி "மில்க்வைற்" நிறுவனத்தார் "நேபியா," "கினி" புல் என்பனவற்றை இலவசமாக வழங்குகின்றனர். நட்டு உண்டாக்க விரும்புவோர் உலக விலங்கு தினமான ஒக்ரோபர் நான்காம் திகதி வெள்ளிக்கிழமை மட்டும் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 3 ஆம் தரப்பு மத்தியஸ்தம்: கருத்துக்கூற ரணில் மறுப்பு

இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண்பதற்கு மூன்றாம் தரப்பு ஒன்றின் மத்தியஸ்தம் குறித்து அரசாங்கம் தனது தீர்க்கமான முடிவை வெளிப்படுத்தினால், அதன் பின்னர் ஐ தே. க தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும்.

— எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஐ. தே. கட்சியின் விசேட நாடாளுமன்றக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது அங்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

"மூன்றாம் தரப்பினர் மத்தியஸ்தம் வகிப்பதால் ஏற்படும் நன்மை தீமைகள் குறித்து ஆராயப்படவேண்டும். யுத்தம் தொடர்பான தள நிலைமை உடனுக்குடன் எமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதன் பின்னரே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் குறித்து எமது பக்கக் கருத்தை நாம் கூறமுடியும்."

— இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-3)

# கூட்டுறவுக் கடைகளில் அரிசி முடிந்து விட்டது

## நிவாரணம் நிறுத்தப்படலாம்

வலி - தென். மேற்கு ஒக். 3

வலி - தென். மேற்கு கூட்டுறவுச் சங்கங்களில் இலவச உலர் உணவு விநியோகம் நிறுத்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

கைவசம் இருந்த அரிசி தீர்ந்து போயுள்ளது. நிவாரணத்துக்கு அரிசி இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

துறை முகத்திலிருந்து அரிசியை ஏற்றி வருவதற்கு லொறிகள் இல்லை என்றும்—

இதனால் நிவாரண விநியோகம் நிறுத்தப் படலாம் என்றும் — கூட்டுறவுச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-145)

# கிளிநொச்சிக்கு மக்களை அழைக்கும் திட்டம் இல்லை

## இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஒக். 3

கிளிநொச்சி இராணுவ நடவடிக்கையை அடுத்து அங்கு இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் கிளிநொச்சிக்கு அழைக்கும் உடனடித்திட்டம் எதுவும் கிடையாது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதற்கு ஒரு வாரகாலத்துக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் முற்றிலும் இராணுவ நோக்கம் கொண்டவை. கிளிநொச்சிக்கு மீண்டும் மக்களைக் கொண்டு வருவதற்கான காலவரையறை குறித்து நாம் இன்னமும் தீர்மானிக்கவில்லை.

இக்கட்டத்தில் கிளிநொச்சி மீதான எமது நடவடிக்கைகள் முற்றிலும் இராணுவ ரீதியான இலக்குகளைக் கொண்டவையே — இவ்வாறு அவர் மேலும் கூறியதாக ரோய்ட்டர் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-3)

**நாளை**

புரட்டாதி 18
வெள்ளிக்கிழமை

திதி: ஸப்தமி
காலை 7.17 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
பி.இ. 1.06 வரை.
ராகுகாலம்: 10.32—12.02
சுபநேரம்: 6.02 — 7.32
(பகலுக்கும் இரவுக்கும் —பழைய நேரப்படி)

# சேதமடைந்த பதிவுகளை எங்கே பெறுவது?

யாழ்ப்பாண மக்கள் இடம்பெயர்ந்து சென்ற போது அவர்கள் தமது உடைமைகள் பலவற்றையும் இழந்து சென்றார்கள். பின்பு தமது சொந்த இடங்களுக்கு மீளக் குடியேறியபின் அவர்களது அலுவல்கள் ஒவ்வொன்றுக்கும் அத்தாட்சிப் பத்திரங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் அவை அவர்தம் கைகளில் இல்லை; தொலைந்து விட்டன. அவற்றை மீளப் பெறுவதற்கென உரிய விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து உரிய திணைக்களங்களில் ஒப்படைக்கிறார்கள். ஆனால் விளைவு பதிவுப் புத்தகங்கள் சேதமடைந்து விட்டன என்ற பதிலேயாகும்.

இன்றைய காலகட்டத்தில் அடையாள அட்டை மிகவும் இன்றியமையாத அத்தியாவசிய தேவைகளுள் ஒன்றாக மாறிவிட்டது. அடையாள அட்டை இல்லாதோர் அதனைப் புதிதாகப் பெற்றுக் கொள்வதற்கு பிறப்புச்சான்றிதழ் வேண்டும். பிறப்புச்சான்றிதழுக்கு விண்ணப்பித்ததன் பதிவுகள் சேதமடைந்ததாகக் கூறப்படுகிறது. அவ்வாறாயின் அதனை எங்கே பெற்றுக் கொள்வது? அடையாள அட்டையை எவ்வாறு பெற்றுக் கொள்வது?

இவ்வாறே பாடசாலை விடுகைப் பத்திரம் போன்றவை பாடசாலைகளில் தொலைந்து விட்டதால் மாணவர்களிற் பலர் உயர் கல்வியையோ அல்லது வேலை வாய்ப்புக்களையோ நாடிச் செல்லுமிடத்து அவற்றைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படும் கால தாமதத்தினால் அவற்றை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுவிடுகிறது.

இன்றைய சூழ்நிலையில் இவற்றின் அவசியத் தன்மையை உணர்ந்து உரிய அலுவலகங்களோ அல்லது உரியவர்களோ இவ்வாறான பத்திரங்களைப் பொது மக்கள் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

வி. மயில்வாகனம்

மருதடி வீதி, நல்லூர்.

# வேலியே பயிரை மேய்வதா?

1995 பிற்பகுதியில், இராணுவ நடவடிக்கையால் குடாநாட்டு மக்களில் பெரும்பாலானோர் தமது சொந்த வீடுகளையும் சொத்துக்களையும் விட்டு வெளியேறினர். அவர்களின் பலர் இன்னும் தமது வீடுகளுக்குத் திரும்ப முடியாத நிலையிலேயே உள்ளனர். அவர்களின் சொத்துக்களைத் தமிழர்களே கொள்ளையடிப்பது யாவரும் அறிந்ததே!

அத்துடன் நின்றுவிடாது பல ஆயிரம் ரூபா பெறுமதியான கதவுகள், நிலைகள் போன்றவற்றையும் கொத்தி விறகுக்காகக் கேவலம் ரூ. 150 வரை விற்றுவருகின்றனர். இதை எல்லோரும் பேசிக்கொள்ளுகின்றனர். ஆனால் தடுக்க யாரும் முன்வரவில்லை. இவற்றை வாங்காமல் விடுவதும் கூட அவற்றைத் தடுக்கும் ஒரு வழிதான் என்பதை அனைவரும் உணரவேண்டும்.

இவற்றுக்கெல்லாம் மேலாக சுண்டுக்குளிப் பகுதியில் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் ஒன்றை வகிப்பவர், ஆட்கள் இல்லாத வீடுகளில் யாரும் உட்புகக் கூடாது என எழுதி ஒட்டிவிட்டு தான்மட்டும் தன் கையாள்களுடன் உட்சென்று ஓடுகள், மரங்கள், கதவுகள், மற்றும் தளபாடங்கள் போன்றவற்றைக் கொள்ளையடித்து விற்றுப் பணம் சம்பாதித்து வருகின்றார். வீட்டுக்காரர்களின் உறவினர்கள் கேட்டால் கூட "உன்னுடைய வீடா இது? வீட்டுக்காரர் என்னைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிக் கடிதம் எழுதியுள்ளார்" எனக் கூறித் தன் செயற்பாடுகளைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றார். ஆட்கள் இல்லாத வீடுகளில் யாரும் இருக்க விரும்பினால் கூட "அங்கு வெடிபொருள்கள் உண்டு" எனக் கூறிப்பயமுறுத்தி விடுகின்றார்.

வாசகர் திருமுகம்

எல்லோருக்கும் வேண்டிய பதவியில் இவர் அமர்ந்திருப்பதால் அனைவரும் மேல் நடவடிக்கையில் ஈடுபடாமல் பேசாது இருந்து விடுகின்றனர். இந்நிலை தொடர்ந்து அனுமதிக்கப்படலாகாது. காவலாக இருக்க வேண்டிய வேலியே பயிரை மேய்வதை உடனடியாகத் தடுத்தாக வேண்டும்.

உதவி அரச அதிபர்கள் இவற்றைப் பொதுமக்களின் உதவியுடன் தடுத்தாகவேண்டும். இல்லையேல் எமது இனத்துக்கு நாமே குழி பறித்தவர்களாவோம். அனைவரும் ஒன்றுபட்டு இவற்றைத்தடுக்க உதவுவார்களா?

வி. எஸ். ஆனந்தன்

சுண்டுக்குளி

யாழ். குடாநாட்டின்

# புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை துரிதப்படுத்த அனுருத்த உத்தரவு

யாழ். குடாநாட்டில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவேண்டும் என்றும்—

அரசாங்கத் திணைக்களங்கள் யாழ். நகரில் மேற்கொள்ளும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்றும்—

மின்சக்தி, நீர்ப்பாசனத் துறை அமைச்சரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்த பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற உயர் மட்ட மாநாடு ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

யாழ். குடாநாட்டில் நடைபெறும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய பாதுகாப்பு அமைச்சில் அமைச்சர் அனுருத்த தலைமையில் நடந்த இந்த உயர்மட்ட மாநாட்டில் அமைச்சுச் செயலாளர்கள், திணைக்கள அதிகாரிகள் உட்பட பாதுகாப்பு உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

உணவு, வீதி அமைப்பு, மின்சாரம், சுகாதார வசதிகள், நகர அபிவிருத்தி போன்ற விடயங்கள் குறித்து அங்கு ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# கருணாநிதியை பதவி நீக்க கோரும் சுப்பிரமணியசாமி

தமிழ்நாட்டில் அரசாங்கத்துக்குச் சொந்தமான அமைப்பு ஒன்று, ஆளும் தி. மு கவினால் நடத்தப்படும் ''முரசொலி'' நாளேட்டுக்கு விளம்பரம் ஒன்றை அளித்துள்ள காரணத்தால், மாநில முதலமைச்சர் மு. கருணாநிதி மாநில சட்டப் பேரவையின் உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படவேண்டும் என்று ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே சுப்பிரமணியசுவாமி இக்கோரிக்கையை விடுத்தார்.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் '9 ஏ' பிரிவு மற்றும் அரசமைப்பின் 161 ஆவது பிரிவு ஆகியவற்றின் கீழ் இதற்கான மனு ஒன்றை மாநில ஆளுநரிடம் தாம் சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மு. கருணாநிதிக்கும் அவரின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் சொந்தமான ஒரு டிரஸ் அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் ''முரசொலி'' நாளேடு வெளியிடப்படுகிறது. (உ-3)

# குடாநாட்டு மக்களின் பிரச்சினைகள் நேற்றைய விசேட மாநாட்டில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் நேற்று முழு நாளும் யாழ். செயலகத்தில் நடைபெற்ற விசேட மாநாட்டில் ஆராயப்பட்டது.

இம்மாநாட்டுக்கு வடமாகாண மீள் குடியேற்ற அதிகார சபைத் தலைவர் சோமபால குணதீர தலைமை வகித்தார்.

குடாநாட்டின் சகல பகுதிகளிலும் பணி புரியும் அரச உயர் அதிகாரிகளும் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

பாவனைப் பொருள்களைக் கொழும்பில் இருந்து கொண்டு வருவதில் உள்ள கஷ்டங்கள், தடங்கல்கள் என்பன குறித்தும்—

மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதில் உள்ள பிரச்சினைகள், எரிபொருள் விநியோகம் என்பன குறித்தும் நேற்றைய மாநாட்டில் கலந்துரையாடப்பட்டது. (அ-3)

# ஆசிரியர் தினத்தன்று ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்!

எதிர்வரும் 6 ஆம் திகதி ஆசிரியர் தினத்தன்று ஆர்ப்பாட்டம் நடத்தி, பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்க ஆசிரிய சங்கங்கள் பல ஒன்று கூடி முடிவு செய்துள்ளன.

ஆசிரிய சேவை அமைக்கப்படும் எனத் தேர்தல் வேளையில் வாக்குறுதி அளித்த அரசு அச்சேவையை இப்போது அரைகுறையாக நடைமுறைப்படுத்த முயல்கின்றது. அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசு முகம் கொடுக்க நேரிடும் — என்றார் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் சரத் காலல. (உ-10)

## தமிழகத்துக்கு—

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தால் உடனடியாக சுமார் பத்தாயிரம் அகதிகள் இராமேஸ்வரம் வந்து விடுவார்கள்.'' — இவ்வாறு இராமேஸ்வரத்துக்கு நேற்று முன்தினம் வந்துசேர்ந்த அகதிகள் கூறியதாக பி. பி. ஸி தெரிவித்தது.

கிளிநொச்சி மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் — கடந்த ஜூலை 31 ஆம் திகதிக்குப் பிறகு — இதுவரை சுமார் மூவாயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகத்துக்கு வந்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-10)

## அமெரிக்க உளவு நிறுவனம்

உலகம் முழுவதும் விமானங்கள், வான்கலங்கள் வழியே உளவுத்தகவல்களை சேகரித்து வரைபடம் தயாரிக்கும் புதிய உளவு நிறுவனம் ஒன்றை அமெரிக்க அரசு உருவாக்கி உள்ளது. (இ-3)

## கைதான.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

இன்று யாழ்ப்பாணம் வரும் கப்பலில் இவர்களுடன் 500 யாழ். அகதிகளும் அரச அதிகாரிகள் சிலரும் இங்கு வரவுள்ளனர்.

இதே வேளை —

நேற்று யாழ்ப்பாணம் வரும் என எதிர்பார்க்கப்பட்ட இரண்டு கப்பல்களும் வந்து சேரவில்லை.

திருமலை - காங்கேசன் துறைமுகங்களுக்கு இடையேயான பாதுகாப்பு நேற்று சாதகமாக இல்லாமையாலேயே —

அக் கப்பல்கள் திருமலையிலிருந்து புறப்படவில்லை என்று தெரிய வருகிறது. (அ-3)

## 346 அகதிகள்—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் இந்தியாவுக்குச் செல்வதைத் தடுப்பதற்காக இந்திய—இலங்கை அதிகாரிகள் கூட்டாக எடுத்த நடவடிக்கைகளை அடுத்து தமிழகத்துக்கு வரும் இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை பெருவீழ்ச்சியடைந்திருப்பதாக இலங்கை அரசு சார்பு செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டு ஒரு சில தினங்களுக்குள்ளேயே ஒரே நாளில் 346 அகதிகள் இராமேஸ்வரம் வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

139 குடும்பங்களைச் சேர்ந்த 169 ஆண்கள், 113 பெண்கள், 64 சிறுவர், சிறுமியர் என 346 பேர் இராமேஸ்வரத்தை நேற்று முன்தினம் மாலை வந்தடைந்தனர்.

அவர்களிடம் பெரும்பாலும் 'சூட்கேஸ்' இருக்கவில்லை. சாக்குப் பைகளிலும் பிளாஸ்டிக் பைகளிலுமே அவர்கள் தமது உடைமைகளைக் கட்டி எடுத்து வந்தனர்.

கடும் இராணுவத் தாக்குதலுக்கு இலக்கான கிளிநொச்சியிலிருந்து அடர்ந்த காடுகள் வழியாக சுமார் நூறு கிலோ மீற்றர் தூரம் நடந்து வங்காலை, விடத்தல்தீவுப் பகுதிகளை அடைந்து, அங்கிருந்து படகுகள் மூலம் தாங்கள் இராமேஸ்வரத்தை வந்தடைந்ததாக அவர்கள் இராமேஸ்வரத்தில் வைத்து பி. பி. ஸி. செய்தியாளரிடம் தெரிவித்தனர். (உ-3)

## காணமற்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனர்.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் குடாநாட்டில் கைதானதாகக் கூறப்படுவோரில் 193 பேரைப் பற்றிய தகவல் இல்லை என்று யாழ். அரச அதிபர் அரசுக்கு அனுப்பிய தமது மாதாந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

அதன் பின்னர் செப்ரெம்பர் மாதத்தில் கைதானதாகக் கூறப்படும் மேலும் பலர் குறித்த தகவல்கள் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. (அ-3)

## வன்னியைப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியில் தமது தளத்தை உறுதி செய்த பின்பு அரசுப் படைகள் தொடர்ந்து வன்னிக் காட்டுப் பகுதியில் புலிகளின் மையங்களைத் தாக்கும் என்றும் தளபதி தளுவத்த மேலும் தெரிவித்திருக்கின்றார். (உ-3-10)

# வன்னியில் போதுமான உணவு மற்றும் பொருள்கள் கிடையா

## ரெலோ அமைப்பு செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 3

வன்னியில் போதுமான உணவு மற்றும் பொருள்கள் கிடையாது. இதனால் தான் மக்கள் இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்கின்றனர்.

கிளிநொச்சி இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில், ரெலோ அமைப்பின் செயலாளர் எம். கே. சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வாறான யுத்தம் நடைபெறும்போது மக்கள் தப்பி வேறு இடங்களுக்குச் செல்கிறார்கள். அங்கு தங்கியிருந்தால் ஷெல் வீச்சு, குண்டு வீச்சுகளுக்கு இலக்காகலாம் எனக் கருதியே அவர்கள் தப்பிச் செல்கிறார்கள்.

இவ்வாறு சுமார் 75 ஆயிரம் மக்கள் மாங்குளம், துணுக்காய்ப் பகுதிகளுக்குச் சென்றுள்ளனர்.

அப்பகுதிகளில் எதுவித வசதிகளும் இல்லை. உணவு, நீர், தங்குமிட வசதிகள் எதுவுமின்றி அவர்கள் கஷ்டப்படுகிறார்கள்.

அப்பகுதியில் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவும், அகதிகளுக்கான ஐ. நா. அமைப்பும் மாத்திரமே செயற்படுகின்றன.

அந்த அமைப்புகளும் இம்மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளன.

உணவு மற்றும் பொருள்களை எடுத்துச் செல்ல அரசு அனுமதி வழங்கவில்லை. எனவே தான் அங்குள்ள மக்கள் இந்தியா செல்ல முனைகிறார்கள்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-10)

## மூலிகை மூலம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான பாத்திரங்கள் மற்றும் உபகரணங்களை விஞ்ஞானிகளே கொடுத்தனர்.

மூலிகையிலிருந்து பெறப்படும் இரசாயனக் கலவையைக் கலக்குவதற்கு வழமையாக ராமர்பிள்ளை பயன்படுத்தும் தடியில் துவாரங்கள் காணப்படுவதாகவும்—

அவை மெழுகால் அடைக்கப்பட்டுள்ளதாகவும் —

கலவையைக் கலக்கும் போது அந்த மெழுகு உருக அந்தத் துவாரத்தின் ஊடாக அந்தத் தடியினுள் வைக்கப்பட்டிருக்கும் பெற்றோல் கலவைக்குள் கசிவதாகவும்—

இந்திய அறிவியல் தொழில் நுட்பக்கழகத்தின் செயலர் வலங்கைமான் இராமமூர்த்தி கூறுகிறார்.

சென்னையில் ராமர்பிள்ளை தமது கண்டுபிடிப்பை செய்து காட்டிய போது தாங்கள் கொடுத்த தடியைப் பயன்படுத்தியதாகவும்—

இதனால் பெற்றோல் உருவாகாமல் போனது என்றும்—

விஞ்ஞானிகள் தரப்பில் கூறப்பட்டது.

சுத்திகரிப்பு நிலையங்களில் மசகு எண்ணெயைச் சுத்திகரிப்புச் செய்யும் போது அதில் வேறு சில இரசாயனப் பொருள்கள் சேர்க்கப்படுவதாகவும்—

ராமர்பிள்ளை தண்ணீரில் மூலிகையை அவித்து வடித்த பெற்றோலிலும் இந்த இரசாயனப் பொருள்கள் காணப்படுவதாகவும்—

விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டினர்.

இது தவிர அவர் வடித்ததாகக் கூறப்படும் மூலிகைப் பெற்றோலை இரசாயனமுறையில் பகுப்பாய்வு செய்து பார்த்தபோது அதில் பூமிக்கு அடியில் காணப்படும் கனிப் பொருள்களே காணப்பட்டன என்றும்—

இயற்கை மூலிகையின் அதாவது தாவரத்தின் அடிப்படைச் சான்றுகள் காணப்படவில்லை என்றும்—

அவர்கள் மேலும் தெரிவித்தனர்

ஆனால் —

தமது கண்டுபிடிப்பை நிருபிக்க தான் மேலும் முயற்சிக்க போவதாகவும்—

தனது மூலிகை இரசாயனக் கலவையில் வேறு ஏதேனும் ஒரு பொருள் கலந்ததால் தமது அந்த முயற்சி தோல்வியில் முடிந்திருக்கலாம் எனவும்—

ராமர் பிள்ளை கூறுகின்றார்.

தமது சொந்த ஊரான இடையன்குளத்தில் உள்ள தமது நிலையத்துக்கு வருமாறு விஞ்ஞானிகளுக்கு அழைப்பு விடுத்த அவர், அங்கு வைத்து தமது கண்டுபிடிப்பைத் தாம் மீண்டும் நிரூபித்துக் காட்டுவதாக சொன்னார்.

தமது கண்டுபிடிப்பின் பிரகாரம் இதுவரை 10 ஆயிரம் லீற்றர் பெற்றோலை உற்பத்தி செய்து அங்குள்ள லொறி, ஓட்டோ ஆகியவற்றுக்கு லீற்றர் 5 ரூபாப்படி தாம் விற்றதாகவும் — அவர் கூறுகிறார்.

எதிர் வரும் 5 ஆம் திகதி டில்லியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், விஞ்ஞானிகள் முன்னால் சமுகம் தந்து தமது கண்டுபிடிப்பைச் செய்து காட்டுமாறு டில்லி எரிபொருள் கூட்டுத்தாபனம் அவருக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அங்கு இவர் பயணமாவதற்கு முன்னர் இவரைக் கௌரவித்து ஆந்திர முதல்வர் சந்திரபாபுநாயுடு பண முடிப்பு ஒன்றை இன்று வழங்கவிருக்கிறார். (உ-3)

## கல்முனை வழமைக்கு திரும்புகின்றது

தமிழர் - முஸ்லிம் கலவரங்களை அடுத்துப் பெரும் பதற்றத்துக்கு உள்ளான கல்முனைப் பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டிருப்பதை அடுத்து சில நாட்கள் வெறிச்சோடிக் கிடந்த நகரம் படிப்படியாக வழமை நிலைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

ஆனால் அங்கு தொடர்ந்து பாடசாலை, அலுவலகங்கள் மூடப்பட்டே உள்ளன. (உ-3)

## ஆஸ்பத்திரி சேதங்கள் விவரம் திரட்டு

யாழ். மாவட்டத்திலுள்ள, பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுக்கு உட்பட்ட வைத்தியசாலைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் மற்றும் தேவைகள் குறித்த விவரங்கள் திரட்டப்பட்டுவருகின்றன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பான சேதவிவரங்கள் பற்றிய தகவல்களும் சேகரிக்கப்படுகின்றன.

இது தொடர்பாக யாழ். மாவட்டத்துக்கு விஜயம் செய்துள்ள வடக்கு, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் சண்முகதாசன் ஆஸ்பத்திரிகளுக்கு நேரில் சென்று சேதங்களைப் பார்வையிடுவதுடன் தேவைகளையும் அறிந்து வருகிறார். (இ-15)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 03-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.